# வருடாந்த கடன் முகாமைத்துவ அறிக்கை

## நிதி ஆண்டு 2025

பொது கடன் முகாமைத்துவ அலுவலகம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

# வருடாந்த
# கடன் முகாமைத்துவ
# அறிக்கை

பொது கடன் முகாமைத்துவ அலுவலகம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**உள்ளடக்கம்**

**அத்தியாயம் 01 : இலங்கையின் கடன் முகாமைத்துவச் செயற்பாடுகளின் பூரண மாற்றம்**


1.1 மேன்நோக்கு ........ 1

1.2 பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தைத் தாபித்தல் ........ 2

1.2.1 தூரநோக்கு பணிக்கூற்று மற்றும் இலக்குகள் ........ 2

1.2.2 பொதுப்படுகடன் முகாமைத்துவத்தின் ஆளுகைக் கட்டமைப்பு ........ 3

1.2.3 பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் கடன் முகாமைத்துவத்திற்கான புதிய கருத்தாக்கக் கட்டமைப்பு ........ 4

1.2.4 2025 இல் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் அடைந்த முக்கிய மைல்கற்கள் .. 5


**அத்தியாயம் 02: பொதுப் படுகடன் மற்றும் அரசாங்கத்தின் படுகடன்**


2.1 மேன்நோக்கு ........ 7

2.2 பொதுப் படுகடன் இருப்பு ........ 7

2.3 அரசாங்க படுகடன் இருப்பு........ 9

2.3.1 2025 இறுதியில் அரசாங்கப் படுகடன் பட்டியலின் மீட்பு விவரக்குறிப்பு........ 10

2.3.2 வெளிநாட்டுப் படுகடன் பட்டியல் கட்டமைப்பு ........ 11

2.3.3 உள்நாட்டுக் படுகடன் பட்டியலின் கட்டமைப்பு ........ 13


**அத்தியாயம் 03 : படுகடன் பாய்ச்சல்கள்**


3.1 மேன்நோக்கு ........ 13

3.2 கடன் வரவுகள் – புதிய கடன் பெறுதல்கள் மற்றும் நிதி விடுவிப்புகள் ........ 13

3.2.1 மூலவாரியான கடன் பெறுதல் – திட்டமிடப்பட்டவை, உண்மையானவை ........ 14

3.2.2 வெளிநாட்டு கடன் நிதி விடுவிப்புகள் மற்றும் பயன்பாடு ........ 14

3.3 கடன் வெளியேற்றங்கள் – கடன் சேவைச் செலுத்தல்கள்........ 15

3.4 நிகரக் கடன் பாய்ச்சல்கள் ........ 16


**அத்தியாயம் 04 : அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் பொறுப்புக்களின் செலவு மற்றும் இடர்நேர்வுக் குறிகாட்டிகள்**


4.1 மேன்நோக்கு ........ 18

4.2 அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் பொறுப்புக்களின் செலவு........ 18

4.2.1 மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்துக்கான அரசாங்க படுகடன் ........ 18

4.2.2 மொ. உ. உற்பத்திகளுக்கான கடன் சேவைக் கொடுப்பனவுகள் ........ 20

4.2.3 அரசாங்க வருமானத்திற்கான வட்டிக் கொடுப்பனவு ........ 20

4.3 அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் பொறுப்புக்களின் இடர்நேர்வு........ 22

4.3.1 வட்டி வீத இடர்நேர்வு ........ 22

4.3.2 வட்டி விகித மறுநிர்ணயத்துக்கான சராசரிக் காலம் ........ 23

4.3.3 மொத்தக் கடன்கள் மற்றும் உள்நாட்டுக் கடன்கள் என்பவற்றுக்கான திறைசேரி உண்டியல்களின் சதவிகிதம்........ 23

4.3.4 மீள்நிதியிடல் இடர்நேர்வு.....23
4.3.5 நாணய விகித இடர்நேர்வு..... 24

**அத்தியாயம் - 05 நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் 2025-2029**

**அத்தியாயம் - 06 படுகடன் முகாமைத்துவ செயற்பாடுகளில் முன்னேற்றங்கள்**

6.1 உள்நாட்டு படுகடன் முயற்சிகள்.....28
6.1.1 திறைசேரி உண்டியல்கள் முதன்மைச் சந்தை.....29
6.1.2 திறைசேரி முறிகள் முதன்மைச் சந்தை.....30
6.1.3 உள்நாட்டு டொலர் முறிகள்.....31

6.2 வெளிநாட்டுக் கடன் பெறுகை முயற்சிகள்.....32
6.2.1 வெளிநாட்டுக் கடன் பெறுவதற்கான மூலோபாய அணுகுமுறை.....32
6.2.2 அபிவிருத்திப் பங்காளர்களின் வெளிநாட்டுப் படுகடன் உறுதிமொழிகள்.....32
6.2.3 புதிய வெளிநாட்டு உறுதிப்பாடுகளின் துறைவாரியான பங்கீடு (ஐ.அ.டொ .மில்லியன்).....33
6.2.4 முன்னோக்கிய வெளிநாட்டு நிதியளிப்பு மூலோபாயம்.....34

6.3 முதலீட்டாளர் உறவு முன்னெடுப்புகள்.....34
6.3.1 கடன் தரமதிப்பீட்டு நிறுவனங்களுடனான தொடர்பு.....34
6.3.2 அரசாங்கக் படுகடன் தகவல் வெளியீடு ,ஒழுங்குபடுத்துகை மற்றும் சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.....35
6.3.3 முதலீட்டாளர் உறவுகள் தொடர்பாக சர்வதேச நிதி நிறுவனத்துடன் ஈடுபடுதல்.....36
6.3.4 படுகடன் வெளிப்படைத்தன்மை.....36

**அத்தியாயம் 07 : உத்தரவாதங்களும் கடன்மீள் கொடுப்பனவு வசதிகளும்**

7.1 மேன்நோக்கு.....37
7.2 அரச உத்தரவாதங்களுடனான கடன் விவரம்.....37
7.2.1 கடன் உத்தரவாதங்களின் இருப்பு.....37
7.2.2 கடன்கொடுநர்களின் வகைக்கு அமைய கடன் உத்தரவாதங்களின் உள்ளமைவு.....38
7.2.3 கடன்படுநர்களுக்கு அமைய உள்ளமைவு.....39
7.2.4 நாணய அலகிற்கு அமைய உள்ளமைவு.....39
7.2.5 கடன் மீள்கொடுப்பனவு வசதிகளின் விவரம்.....40
7.2.6 உத்தரவாதங்களை மீண்டும் கோருதல் மற்றும் கொடுப்பனவுகள்.....41
7.3 கடன் மீள்கொடுப்பனவு வசதிகளின் விவரம்.....41
7.3.1 மீள்கடன் கொடுப்பனவு வசதிகளின் இருப்பு.....42
7.3.2 நிதியத்தின் தோற்றுவாய்களுக்கு அமைய உள்ளமைவு.....42
7.3.3 பயன்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனங்களுக்கு அமைய உள்ளமைவு.....42

# அட்டவணைகள்

**1. இலங்கையின் கடன் முகாமைத்துவச் செயற்பாடுகளின் பூரண மாற்றம்**


1.1: 2025 ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகம் அடைந்த முக்கிய அடைவுகள்............4


**2. பொதுப் படுகடன் மற்றும் அரசாங்கத்தின் படுகடன்**


2.1: 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான பொதுப் படுகடன் நிலுவைகள் ............7

2.2: நிலுவையில் உள்ள உள்நாட்டுப் படுகடன்களின் சுருக்கம்............11


**3. படுகடன் பாய்ச்சல்கள்**


3.1: திட்டமிடப்பட்ட எதிர் உண்மையான கடன் பெறுதல்கள் - 2025............14

3.2: 2025 ஜனவரி 1 ஆம் திகதி முதல் 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு கடன்களின் நிதி விடுவிப்புகள்............15

3.3: அரசாங்க படுகடன் சேவை செலுத்தல்கள் - 2025 (ரூ.பில்.)............16

3.4: 2025இல் படுகடன் பாய்ச்சல்கள் ............17


**4. அரசாங்கத்தின் படுகடன் தொகுப்பு செலவு மற்றும் இடர்நேர்வுக் குறிகாட்டிகள்**


4.1: மீள்நிதியிடல் இடர்நேர்வுக் குறிகாட்டிகள் ............23


**5. நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் 2025-2029**


5.1: 2025-2029 மற்றும் 2026-2030 நடுத்தரகால கடன் முகாமைத்துவ மூலோபாயத்திற்கு அமைவாக செலவு மற்றும் இடர்நேர்வுச் சுட்டிகளின் ஒப்பீடு............27


**6. படுகடன் முகாமைத்துவ செயற்பாடுகளில் முன்னேற்றங்கள்**


6.1: உள்நாட்டு கடன்பெறுகை வெளியீடுகளின் செயலாற்றுகை - 2025 ............28

6.2: திறைசேரி உண்டியல் ஏலங்களின் முதன்மைச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்* % ............29

6.3: 2025 ஆம் ஆண்டில் ஏற்படும் விளைச்சல் மாற்றங்கள் ............29

6.4: 2025 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட வேண்டிய திறைசேரிப் பத்திரங்கள்............30

6.5: உள்நாட்டு டொலர் முறி வெளியீடுகளின் முடிவு............31

6.6: அபிவிருத்தி பங்காளர்களின் வெளிநாட்டுப் படுகடன் உறுதிமொழிகள் ............33

6.7: இலங்கையின் கடன் தரமதிப்பீட்டு இற்றைப்படுத்தல்கள் ............35

**7. உத்தரவாதங்களும்  கடன்மீள் கொடுப்பனவு வசதிகளும்**

7.1: கடன்வழங்குநர்களின் வகைக்கு அமைய அரச உத்தரவாதங்களுடனான கடன்கள்................38
7.2: உத்தரவாத படுகடன் சேர்க்கையின் பாரியளவிலான கடன்கொடுநர்கள் ........................................38
7.3: உத்தரவாதங்கள் வழங்கப்பட்டு உள்ள பாரியளவிலான கடன்படுநர்கள் ........................................39
7.4: 2025 ஆம் ஆண்டில் மீண்டும் வழங்கப்பட்ட / நீடிக்கப்பட்ட உத்தரவாதங்கள்.................................41

## வரைபுகள்

**2. பொதுப் படுகடன் மற்றும் அரசாங்கத்தின் படுகடன்**

2.1: பொதுப் படுகடன் கட்டமைப்பு 2025 ........................................................................................ 8
2.2: மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுப் படுகடன் ....................................................................... 9
2.3: 2025 இறுதியில் உள்ளவாறான அரசாங்கப் படுகடன் பட்டியலின் மீட்பு விவரம்..................10
2.4: செலாவணி அடிப்படையில் வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம் - 2025 இறுதியில் 10
2.5: வட்டி விகித வகையின் அடிப்படையில் வெளிநாட்டுப் படுகடன் ................................................. 11
2.6: படுகடன் வழங்குநர்படி வெளிநாட்டுப் படுகடன் கட்டமைப்பு - 2025 இறுதியில்.................11
2.7: வட்டி விகித வகையின் அடிப்படையில் வெளிநாட்டுப் படுகடன்...................................................11
2.8: முதிர்வுக் காலத்தின் அடிப்படையில் உள்நாட்டுக் படுகடன் பிணையங்கள்......................... 12
2.9: வட்டி விகித வகையின் அடிப்படையில் உள்நாட்டுப் படுகடன் பிணையங்கள் .................12

**3. படுகடன் பாய்ச்சல்கள்**

3.1: உள்நாட்டு மற்றும்  வெளிநாட்டு நாணய கடன் பெறுதல்கள் அமைவு....................................... 14
3.2: வெளிநாட்டு கடன் விடுவிப்புகள் (கடன் வழங்குநரினால்).................................................................. 15
3.3: கடன் நிதி விடுவிப்புகளின் பயன்பாடு................................................................................................... 16

**4. அரசாங்கத்தின் படுகடன் தொகுப்பு செலவு மற்றும் இடர்நேர்வுக் குறிகாட்டிகள்**

4.1: கடந்த 10 வருடங்களில் அரசாங்கப் படுகடன் இருப்பில் மாற்றங்கள் ....................................... 18
4.2: ஆரம்ப மீதி ..............................................................................................................................................19
4.3: மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநட்டு கடன் மீள்கொடுப்பனவு ................................... 20
4.4: வருமானத்திற்கான வட்டிக் கொடுப்பனவு.........................................................................................20
4.5: நாணயக் கொள்கை நிலைப்பாடு..........................................................................................................22
4.6: வட்டி வீத வகை........................................................................................................................................22
4.7: மொத்த படுகடன் மற்றும் உள்நாட்டு படுகடன் திறைசேரி உண்டியல்கள் ............................27
4.8: மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகளுக்கு FX படுகடன் ............................................................... 24
4.9: வெளிநாட்டு படுகடனின் திரவத்தன்மை ...........................................................................................24

**6. படுகடன் முகாமைத்துவ செயற்பாடுகளில் முன்னேற்றங்கள்**

6.1: திறைசேரி உண்டியல் ஏலங்களின் முதன்மைச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் .......... 29

6.2 : 2025 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட தொகை மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை..........30

6.3: 2025/2024 ஆம் ஆண்டிற்கான முதன்மைச் சந்தையின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தின் (WAYR) நகர்வு .......... 31

6.4: புதிய வெளிநாட்டு உறுதிப்பாடுகளின் துறைவாரியான பங்கீடு..........33

6.5 : உலக வங்கியின் படுகடன் வெளிப்படைத்தன்மை வெப்ப வரைபடத்தை தரமுயர்த்தல் ..36

**7. உத்தரவாதங்களும் கடன்மீள் கொடுப்பனவு வசதிகளும்**

7.1:நாணயஅலகிற்கமையஉத்தரவாதமளிக்கப்பட்டபடுகடன்விவரம்..........40

## பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு 1 - 2025 இல் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு கையெழுத்திடப்பட்ட கடன்கள்

## முன்னுரை

2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொது படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் 25 ஆம் பிரிவானது, முந்தைய நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கப் படுகடன்கள் மற்றும் பிற படுகடன் முகாமைத்துவச் செயற்பாடுகள், நிலுவையிலுள்ள பொதுப் படுகடன், உத்தரவாதங்கள் மற்றும் மீள்கடன் வழங்கும் நடவடிக்கைகள், மற்றும் பிற நிதி ஏற்பாடுகள் குறித்த வருடாந்த அறிக்கையைத் தயாரிக்குமாறு பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு (PDMO) ஆணையிடுகிறது.

மேலும், பொது படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின்படி, அமைச்சர் ஆண்டு அறிக்கையின் வரைவை ஆய்வு செய்து, அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அதன்பிறகு, முந்தைய நிதியாண்டு முடிவடைந்ததைத் தொடர்ந்து நூற்று எண்பது (180) நாட்களுக்குள் அங்கீகாரமளிக்கப்பட்ட ஆண்டு அறிக்கையை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு அங்கீகாரமளிக்கப்பட்ட குறித்த அறிக்கையினை, நிதி அமைச்சு மற்றும் பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையதளங்களில் பிரசுரித்தல் வேண்டும்.

அதன்படி, பொது படுகடன் முகாமைத்து அலுவலகம், பொது படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் விதிகளுக்கிணங்க, 2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான தனது ஆண்டறிக்கையைத் தயாரித்துள்ளது. இந்த ஆண்டறிக்கை, 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொதுப் படுகடன் முகாமைத்துவச் செயற்பாடுகள் குறித்த விரிவானதொரு  தெளிவை வழங்குகிறது, அவற்றுள் பின்வருவன அடங்கும்:

- அரசாங்க மற்றும் பொதுப் படுகடன் இருப்பின் அமைப்பு மற்றும் பரிணாம வளர்ச்சி;
- அரசாங்க கடன் பெறுகை மற்றும் படுகடன் மீள்செலுத்தல் நடவடிக்கைகள்
- படுகடன் பாய்ச்சல்கள் மற்றும் நிதிசார் நடவடிக்கைகள்;
- படுகடன் பட்டுயலின் செலவு மற்றும் இடர் குறிகாட்டிகள்;
- நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் செயற்படுத்துகைக் குறித்த மதிப்பீடு;
- அரசாங்க உத்தரவாதங்கள் மற்றும் மீள்கடன் வழங்கல் நடவடிக்கைகள்; மற்றும்
- பிற தொடர்புடைய படுகடன் முகாமைத்துவ முன்னேற்றங்கள் மற்றும் நிதிசார் ஏற்பாடுகள்

இந்த அறிக்கை, பொது படுகடன் முகாமைத்துவத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை மேம்படுத்துவதோடு, 2025 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் கடன் முகாமைத்துவ நடவடிக்கைகள் மற்றும் அதன் விளைவுகள் குறித்த தகவல்களைச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்குகிறது.

## நிறைவேற்றுப் பொழிப்பு

2025 ஆம் ஆண்டு, நிதி அமைச்சின் கீழ் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் (PDMO) நிறுவப்பட்டு செயற்பாட்டுக்கு வந்ததன் மூலம், இலங்கையின் பொதுப் படுகடன் முகாமைத்துவ செயற்பாட்டு வரலாற்றுரீதியான ஒரு மைல்கல்லை எட்டியது. 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம் இயற்றப்பட்டு 2024 நவம்பர் 25 அன்று நடைமுறைக்கு வந்ததன் மூலம் இந்த நிறுவன மறுசீரமைப்பானது சட்டப்பூர்வ அதிகாரம் பெற்றது. வரலாற்று ரீதியாக, படுகடன் செயற்பாடுகள் இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் பல திணைக்களங்களில் சிதறிக் கிடந்த, துண்டு துண்டான மற்றும் எதிர்வினையாற்றும் மாதிரியிலிருந்து விலகி, பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் இந்த முக்கிய செயற்பாடுகளை ஒரு ஒற்றை, ஒருங்கிணைந்த குடையின் கீழ் வெற்றிகரமாக மையப்படுத்தியது. இது மூலோபாயம்சார்ந்த, தொலைநோக்குடைய படுகடன் முகாமைத்துவத்தை வளர்க்கிறது. இந்த மாற்றம், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் ஆதரவுடன், நாட்டின் பரந்த பொருளாதார மீட்பு மற்றும் ஆளுகை செயற்திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறது.

2024 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையின் மொத்த நிலுவையிலுள்ள பொதுப் படுகடன் 31,062 பில்லியன் இலங்கை ரூபாயாக இருந்தது. இது 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 32,195 பில்லியன் இலங்கை ரூபாயாக (103.9 பில்லியன் அமெரிக்க டொலர்) இருந்தது. இந்த மொத்தத்தில் 96 சதவீதத்திற்கும் மேலான நேரடி அரசாங்கக் கடன், 31,109 பில்லியன் இலங்கை ரூபாயாக (100.4 பில்லியன் அமெரிக்க டொலர்) இருந்தது. இதில் உள்நாட்டுக் கடன் 62.5 சதவீதமாகவும் (19,434 பில்லியன் இலங்கை ரூபாய்) மற்றும் வெளிநாட்டுக் கடன் 37.5 சதவீதமாகவும் (11,675 பில்லியன் இலங்கை ரூபாய்) இருந்தது. அத்தியாவசிய நிதித் தேவைகள் மற்றும் நாணய மதிப்பு சரிசெய்தல் காரணமாக பெயரளவு கடன் மிதமாக அதிகரித்த போதிலும், ஒட்டுமொத்த கடன் சுமை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தது. ஏறத்தாழ 5.0 சதவீத உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியைக் கொண்ட ஒரு மீள்திறன் மிக்க பொருளாதார விரிவாக்கத்தால் உந்தப்பட்டு, அரசாங்கக் கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2024 ஆம் ஆண்டில் 98.4 சதவீதத்திலிருந்து 2025 ஆம் ஆண்டில் 95.0 சதவீதமாகக் குறைந்தது.

அந்நியச் செலாவணி இடரைக் குறைக்கவும், உள்நாட்டு மூலதனச் சந்தைகளை வளர்க்கவும், 2025 ஆம் ஆண்டு முழுவதும் நிதி நடவடிக்கைகள், நடுத்தரக் கால படுகடன் படுகடன் மூலோபாயத்தில் (MTDS) குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு சார்ந்த நிதி அணுகுமுறையைக் கண்டிப்பாகப் பின்பற்றின. உள்நாட்டு நிதியுதவியே முதன்மை நிதி ஆதாரமாகத் தொடர்ந்ததுடன்; அரசாங்கத்தின் மொத்த நிதியுதவியில் சுமார் 93 சதவீதம் ரூபாய் மதிப்பிலுள்ள சாதனங்கள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. மொத்த உள்நாட்டுக் கடன் பெறுகைகள் ரூ. 7,761 பில்லியனாக இருந்தது. இது திறைசேரி உண்டியல்கள் (ரூ. 5,347 பில்லியன்) மற்றும் திறைசேரி முறிகள் (ரூ. 2,398 பில்லியன்) ஆகியவற்றால் உந்தப்பட்டது. இந்த ஆண்டில், உள்நாட்டு டொலர் முறிகள் வெற்றிகரமாக மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ. 16 பில்லியன் (ஐ.அ.டொ. 50 மில்லியன்) திரட்டப்பட்டது. இது மீண்ட பணப்புழக்க நிலைகளையும், புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கையையும் குறிக்கிறது. வெளிநாட்டு நிதியாக, இருதரப்பு மற்றும் பலதரப்பு அபிவிருத்திப் பங்காளிகளுக்கு மட்டுமேயான 15 புதிய கடன் ஒப்பந்தங்கள் மூலம் அரசாங்கம் ஐ.அ.டொ. 1,238 மில்லியனைப் பெற்றது. இதன்மூலம், இந்த ஆண்டுக்கான மொத்த வெளிநாட்டுச் செலவினங்கள் ஐ.அ.டொ. 1,780.3 மில்லியனை எட்டியுள்ளன.

அரசாங்கம் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்தியதும், தீவிரமான நிதி ஒருங்கிணைப்பும் இணைந்து, அரசாங்கக் கடன் தொகுப்பின் இடர் தன்மையை குறிப்பிடத்தக்க அளவில் சரிசெய்தன. மொத்தக் கடனில் குறுகிய கால திறைசேரி உண்டியல்களின் சதவீதம் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 14.1 சதவீதத்திலிருந்து 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 10.1 சதவீதமாகக் கடுமையாகக் குறைந்ததால், குறுகிய காலப் புதுப்பித்தல் அழுத்தங்கள் பெருமளவில் தணிக்கப்பட்டன. இது முதிர்வுக் கட்டமைப்பின் திட்டமிட்ட நீட்டிப்பை வெளிப்படுத்துகிறது.

அரசாங்கப் படுகடன் தொகுப்பின் சராசரி முதிர்வுக் காலம் (Average Time to Maturity) ஆனது, 6.8 ஆண்டுகளாக மேம்பட்டதன் மூலம் வெளிநாட்டு மறுசீரமைக்கப்பட்ட கடன் மீட்புகளை 2042 வரை வெற்றிகரமாக நீட்டித்தது. வட்டி விகித அதிர்ச்சிகளால் ஏற்படும் பாதிப்புகள் கடுமையாக நிர்வகிக்கப்பட்டன, மொத்தப் படுகடன் இருப்பில் 88 சதவீதம் நிலையான வட்டி விகிதங்களில் பராமரிக்கப்பட்டது. வலுவான வருமான வளர்ச்சி மற்றும் விவேகமான செலவினங்களால் உந்தப்பட்டு, அரசாங்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.36 சதவீதம் (ரூ. 1,756 பில்லியன்) என்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முதன்மை உபரியைப் பதிவு செய்தது. இது ஆரம்பக்கட்ட கட்டமைப்பு இலக்குகளைத் திறம்பட இரட்டிப்பாக்கியதுடன், மதிப்புமிக்க நிதிப் பாதுகாப்பு வளங்களையும் வழங்கியது. மேலும், 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கடன் குறைப்பு நோக்கங்களுக்கு இது ஆதரவளித்தது.

2025 டிசம்பரில் அடிப்படை செயற்பாட்டு மைல்கல் எட்டப்பட்டது. கடந்த எழுபது ஆண்டுகளாக இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்டு வந்த அரசாங்கப் பிணையங்களை வெளியிடும் முழுப் பொறுப்பையும் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டதனைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தடையற்ற, மேற்பார்வையிடப்பட்ட மாற்றம் மற்றும் கடுமையான பயிற்சி ஆகியவை நிகழ்ந்தன. இது சந்தை நடவடிக்கைகள் தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்தது.

சரியான நேரத்தில் கடன் புள்ளிவிவரங்கள், கடன் பெறுகைத் திட்டங்கள் மற்றும் கட்டமைப்பு விவரங்கள் முறையாகப் பொதுமக்களுக்குக் கிடைப்பதை பிரதிபலிக்கும் வகையில், 2025 ஆம் ஆண்டில் உலக வங்கியின் கடன் வெளிப்படைத்தன்மை வெப்ப வரைபடத்தில் இலங்கை பல பரிமாணங்களில் ஒரு விரிவான தர உயர்வைப் பெற்றதுடன், அதன் பெரும்பாலான முக்கிய கூறுகள் "முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டன" என மதிப்பிடப்பட்டன. அதே நேரத்தில், வர்த்தகக் கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்ததைத் தொடர்ந்து, எஸ் அன்ட் பி குளோபல் இலங்கையின் அந்நியச் செலாவணி இறையாண்மை மதிப்பீட்டை 'SD' என்பதிலிருந்து 'CCC+' ஆக உயர்த்தியது.

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் படி அமுல்படுத்தப்பட்ட கடுமையான சட்டப்பூர்வ உச்சவரம்பு, நிலுவையிலுள்ள அரசாங்க உத்தரவாதங்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.5 சதவீதமாகக் கட்டுப்படுத்துகிறது. இலங்கையின் மொத்த நிலுவையிலுள்ள அரசாங்க உத்தரவாதக் கடன் 2025 ஆம் ஆண்டில் 25.7 சதவீதம் சரிந்து ரூ. 1,080 பில்லியனாகக் குறைந்தது (2024 இல் ரூ. 1,454 பில்லியனாக இருந்தது). இதனால், நிபந்தனைக்குட்பட்ட கடன் தொகுப்பு சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.6 சதவீதமாக உள்ளது. இது சட்டப்பூர்வ வரம்பிற்குக் கணிசமாகக் குறைவாகும். ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற முக்கிய நிறுவனங்களுக்கான உத்தரவாதக் கடன் மறுசீரமைப்புகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து இந்தச் சுருக்கம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில், மூலோபாய உட்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனத் துறைக்காகப் பயன்படுத்தப்படும் வெளிநாட்டுச் சலுகை நிதியுதவியால் முதன்மையாக இயக்கப்படும், கடனாக வழங்கப்பட்ட நிலுவைக் கடன்களின் இருப்பு, 2025 டிசம்பர் இறுதிக்குள் ரூ. 234.14 பில்லியனாக (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ~0.71 சதவீதம்) இருந்தது.

இறுதியாக, 2025 ஆம் நிதியாண்டு, பொதுப் படுகடன் முகாமைதுவச் சட்டத்தின் நிறுவன ரீதியான அவசியத்தையும் வலிமையையும் உறுதிப்படுத்தியது. புதிதாகச் செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் மையப்படுத்தப்பட்ட சுறுசுறுப்பின் மூலம், இலங்கை கடன் மறுசீரமைப்பு வெற்றிகளைப் பயன்படுத்திக்கொண்டது. படுகடன் புதுப்பித்தல் இடர்களைக் கட்டமைப்பு ரீதியாகக் குறைத்தது. எதிர்பாரா பொறுப்புகளைக் கட்டுப்படுத்தியதுடன் நிறுவன ரீதியான வெளிப்படைத்தன்மையை மீட்டெடுத்தது. இதன்மூலம், பொதுப் படுகடனை நீண்டகால நிலைத்தன்மைக்கான பாதையில் மீண்டும் உறுதியாக நிலைநிறுத்தியது.

# அத்தியாயம் 1

## இலங்கையின் படுகடன் முகாமைத்துவச் செயற்பாடுகளின் பூரண மாற்றம்

### 1.1 மேன்நோக்கு

நிதி அமைச்சின் கீழ் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் நிறுவப்பட்டு செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டதன் மூலம், 2025 ஆம் ஆண்டானது இலங்கையின் பொது நிதி முகாமைத்துவச் சீர்திருத்தங்களில் குறிப்பிடத்தக்கதொரு மைல்கல்லாக அமைந்தது. இந்த நிறுவன ரீதியான மாற்றமானது, 2024 நவம்பர் 25 அன்று நடைமுறைக்கு வந்த 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கப் பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் மூலமே சாத்தியமாக்கப்பட்டது. இச்சீர்திருத்தமானது, அரசாங்கத்தின் பரந்த பொருளாதார மீட்பு மற்றும் ஆளுகை நிகழ்ச்சி நிரலின் ஒரு முக்கிய அங்கமாக அமைகின்றதுடன், விவேகமான பொதுப்படுகடன் முகாமைத்துவத்தின் ஊடாக நிதி நிலைத்தன்மையை வலுப்படுத்துவதையும் மற்றும் பேரண்டப்-பொருளாதார மீளெழுச்சித் திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆதரவளிக்கப்படுகிறது.

உலக வங்கியினால் நடத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டின் கடன் முகாமைத்துவச் செயலாற்றுகை மதிப்பீட்டின் (DeMPA) கண்டுபிடிப்புகள் மூலம் இந்தச் சீர்திருத்தத்திற்கான தேவை வலியுறுத்தப்பட்டது. இக்கண்டுபிடிப்புகள் நிலவுகின்ற கடன் முகாமைத்துவக் கட்டமைப்பில் உள்ள பல பலவீனங்களைச் சுட்டிக்காட்டின; இதில் துண்டு துண்டான நிறுவனப் பொறுப்புகள், சட்ட மற்றும் ஆளுகைக் கட்டமைப்பில் உள்ள வரம்புகள் மற்றும் கடன் சார்ந்த செயல்பாடுகளின் போதிய ஒருங்கிணைப்பின்மை ஆகியன உள்ளடங்கியிருந்தன. சவால்களை இனங்கண்ட அரசாங்கம், கடன் முகாமைத்துவ நடைமுறைகளை நவீனமயமாக்குவதற்கும் அவற்றை சர்வதேச தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் சீரமைப்பதற்கும் ஒரு விரிவான சீர்திருத்தத் திட்டத்தை ஆரம்பித்தது.

இந்த மாற்றத்தின் மையப்பகுதியில் இரண்டு அடிப்படைத் தூண்கள் உள்ளன: 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கப் பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட வலுவூட்டப்பட்ட சட்டக் கட்டமைப்பு, மற்றும் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தை உருவாக்குவதன் மூலமான ஒரு மையப்படுத்தப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு ஆகியனவாகும்.

இலங்கையின் பொதுப்படுகடன் முகாமைத்துவச் சீர்திருத்தமானது, சட்டக் கட்டமைப்பை ஒற்றை, விரிவான சட்டமாக ஒருங்கிணைப்பதையும் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் சீரமைக்கப்பட்ட ஒரு மையப்படுத்தப்பட்ட கடன் முகாமைத்துவ அலுவலகத்தை நிறுவுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. புதிய கடன் முகாமைத்துவச் சட்டமானது, பொதுப்படுகடனை நிர்வகிப்பதற்காக ஒரே குடையின் கீழ், எதிர்வினை மற்றும் துண்டு துண்டான செயல்பாடுகளிலிருந்து ஒரு மூலோபாய, முன்னோக்கு மற்றும் திட்டமிடப்பட்ட அணுகுமுறையை நோக்கிய சட்டப்பூர்வ மாற்றத்தைக் குறித்தது. புதிய சட்டமன்றக் கட்டமைப்பானது, நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம், மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களம் ஆகியவற்றிற்கு இடையே இதற்கு முன்னர் சிதறிக்கிடந்த கடன் முகாமைத்துவச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் பணியைப் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு வழங்கியுள்ளது.

பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது 2024 திசம்பர் 2 அன்று உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது.

2025 ஆம் ஆண்டின் போது, பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் ஆளுகை, செயற்பாட்டு மற்றும் நிறுவன ரீதியான அடிப்படைகளை நிறுவுவதில் கணிசமான முன்னேற்றம் எட்டப்பட்டதுடன், அரசாங்கத்தின் கடன் நிலைத்தன்மை இலக்குகள் மற்றும் நீண்ட கால நிதி ஸ்திரத்தன்மை ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கக்கூடிய, முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தொழில்முறை சார்ந்த கடன் முகாமைத்துவ நிறுவனமொன்றிற்கான ஆரம்பகட்ட வேலைகளும் அமைக்கப்பட்டன.

## 1.2 பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தைத் தாபித்தல்

### 1.2.1 தூரநோக்கு பணிக்கூற்று மற்றும் இலக்குகள்

**தூரநோக்கு**

உலகளாவிய அரங்கில் நம்பகத்தன்மை, வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றிற்காக அங்கீகரிக்கப்பட்ட, பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கான ஒரு முன்மாதிரியாகத் திகழ்தல்

**பணிக்கூற்று**

இலங்கையின் பொருளாதார மற்றும் நிதி இலக்குகளுடன் சீரமைத்து, நிதியிடல் செலவுகளைக் குறைப்பதுடன் விவேகமான அளவிலான **இடர்நேர்வை** உறுதிப்படுத்தி, அரசாங்கத்தின் கடன் வாங்கல் **தேவைப்பாடுகளை** மூலோபாய ரீதியாகச் செயல்படுத்துவதும் மேற்பார்வை செய்வதும் ஆகும்

**இலக்குகள்**

• நிதியிடல் தேவைகள் மற்றும் கடன் செலுத்தல் கடப்பாடுகளை உரிய நேரத்தில் பூர்த்தி செய்தல்; • விவேகமான அளவிலான இடர்நேர்வுடன் இணங்கிப்போகும் வகையில், நடுத்தர மற்றும் நீண்ட காலப்பகுதியில் சாத்தியமான குறைந்த செலவில் கடன் வாங்குதல்; மற்றும் • உள்நாட்டுக் கடன் பிணையங்கள் சந்தையின் வளர்ச்சியை மேம்படுத்துதல்.

**பொறுப்புகள்**

*அரசாங்கத்தின் கடனை முகாமை செய்தல் *கடன் பிணைகளை வழங்குதலும் முகாமை செய்தலும் *மறு கடனளிப்புச் செயல்பாடுகளை முகாமை செய்தல்; மற்றும் *பொதுப்படுகடனைப் பதிவுசெய்தலும் அறிக்கையிடலும்.

### 1.2.2 பொதுப்படுகடன் முகாமைத்துவத்தின் ஆளுகைக் கட்டமைப்பு




பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது, நிதி அமைச்சரின் கொள்கை வழிகாட்டலின் கீழும் நிதி அமைச்சின் செயலாளரின் நிருவாக மேற்பார்வையின் கீழும் இயங்குகிறது. இதன் பணிப்பாளர் நாயகம் பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் தலைவராகச் செயற்படுவதுடன், கடன் முகாமைத்துவக் கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பானவராவார். பொதுப்படுகடன் ஒருங்கிணைப்புக் குழுவானது (PDCC) மூலோபாய வழிகாட்டல்களை வழங்குவதுடன், கடன் முகாமைத்துவச் செயல்பாடுகள் அரசாங்கத்தின் நிதி மற்றும் பேரண்டப் பொருளாதார இலக்குகளுடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்வதற்காக முதன்மைப் பங்குதாரர்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை வசதிப்படுத்துகிறது.

பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க, கடமைகளின் பயனுள்ள பிரிவினையையும் வலுவான உள்ளக கட்டுப்பாடுகளையும் உறுதிப்படுத்துவதற்காக பிரதான நிர்வாக அலுவலகம், செயற்பாட்டு அலுவலகம் மற்றும் கடைநிலை செயற்பாட்டு அலுவலகம் மாதிரியைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. பிரதான நிர்வாக அலுவலகமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் வாங்கல் செயல்பாடுகள், முதலீட்டாளர் உறவுகள் மற்றும் சந்தை அபிவிருத்தி ஆகியவற்றிற்குப் பொறுப்பாகும். செயற்பாட்டு அலுவலகமானது கடன் மூலோபாய உருவாக்கம், கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வு, கொள்கை பகுப்பாய்வு, இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் இணக்கப்பாட்டைக் கண்காணித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் அதேவேளையில், கடைநிலை செயற்பாட்டு அலுவலகமானது கடன் பதிவுசெய்தல், கடன் வழங்கல், புள்ளிவிவரங்கள் மற்றும் அறிக்கையிடல் செயற்பாடுகளை முகாமை செய்கிறது.

இந்த ஆளுகைக் கட்டமைப்பானது பொதுப்படுகடன் செயல்பாடுகளில் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் ஆகியவற்றை வலுப்படுத்துகிறது. கடன் வாங்கல், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தீர்ப்பனவுச் செயல்பாடுகளை ஒரு பிரத்தியேக

நிறுவனத்திற்குள் தெளிவாகப் பிரிப்பதன் மூலம், பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதுடன், இலங்கையின் கடன் முகாமைத்துவ நடைமுறைகளை சர்வதேச **நியமனங்கள்** மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் சீரமைக்கிறது.

### 1.2.3 பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் கீழுள்ள கடன் முகாமைத்துவத்திற்கான புதிய கருத்தாக்கக் கட்டமைப்பு




பொதுப்படுகடன் முகாமைத்துவச் சட்டம் மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகம் ஆகிய இரண்டும், பொதுப்படுகடன் முகாமைத்துவத்தின் சிறந்த நடைமுறைகள் கட்டியெழுப்பப்பட்டுள்ள இரு தூண்களாகச் சேவை செய்கின்றன. இந்த அதிநவீன கடன் முகாமைத்துவ அணுகுமுறையானது நாட்டின் பிரத்தியேக அளவுகோல்களை அங்கீகரித்து மதிக்கும் அதேவேளை, சர்வதேச சிறந்த நடைமுறைகளுடனும் சீரமைக்கப்பட்டுள்ளது. இப் புதிய கடன் முகாமைத்துவ அணுகுமுறையானது இலங்கையில் மூலோபாய ரீதியாக முகாமை செய்யப்படுகின்ற பொதுப் படுகடன் சொத்துப்பட்டியலுக்கு வழிவகுக்கும்.

### 1.2.4 2025 இல் பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகம் அடைந்த முக்கிய மைல்கற்கள்

**அட்டவணை 1.1: 2025 இல் பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகம் அடைந்த முக்கிய அடைவுகள்**

| மாதம் | முக்கிய அடைவுகள் |
|---|---|
| ஜனவரி | • முக்கிய ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர் மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் செயற்பாட்டுமயமாக்கலுக்கான இயலளவு அபிவிருத்தித் தேவைப்பாடுகளை அடையாளம் காண்பதற்காக சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் கூட்டுத் தூதுக்குழுவுடன் இணைந்து பணியாற்றப்பட்டது.<br>• 01 ஆம் இலக்க பொதுப்படுகடன் முகாமைத்துவச் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது.<br>• பொதுப்படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், பொதுப்படுகடன் ஒருங்கிணைப்புக் குழு நிறுவப்பட்டது.<br>• விரிவான பொதுப் படுகடன் தரவுக் களஞ்சியத்தை உருவாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதுடன், கடன் பதிவுசெய்தல் மற்றும் அறிக்கையிடல் நடைமுறைகள் வலுவூட்டப்பட்டன. |

| மாதம் | முக்கிய அடைவுகள் |
| --- | --- |
| பெப்ரவரி | • 2025-2029 ஆம் ஆண்டுகளுக்கான நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் (MTDS) மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கடன் வாங்கல் திட்டம் (ABP) ஆகியன வடிவமைக்கப்பட்டன. |
| மார்ச் | • சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் ஆதரவுடன் முதலீட்டாளர் உறவுகள் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.<br>• அரசாங்க உத்தரவாதங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு மறு கடன் வழங்குதல் ஆகியவற்றுக்கான கடன் அபாய மதிப்பீட்டுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.<br>• கடன் முகாமைத்துவச் செயற்பாடுகளைப் பரிமாற்றம் செய்வதனை இலகுபடுத்துவதற்காக, இலங்கை மத்திய வங்கியில் பணியிடைப் பயிற்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.<br>• சர்வதேச நிதி நிறுவனத்தின் முதலீட்டாளர் உறவுகள் கணக்கெடுப்பில் பங்குபற்றப்பட்டது. |
| ஏப்ரல் | • சர்வதேச கடன் தரப்படுத்தல் முகவர் நிறுவனங்களுடனான ஈடுபாடுகள் வலுவூட்டப்பட்டன.<br>• வெளிநாட்டு கடன் வாங்கல்களுக்கான செலவு மற்றும் இடர்நேர்வு சார்ந்த மதிப்பீடு<br>• திறைசேரி செயல்பாடுகள் திணைக்களத்திடமிருந்து அரசாங்க கடன் உத்தரவாதச் செயல்பாடுகளுக்கான பொறுப்பு பொறுப்பேற்கப்பட்டது. |
| மே | • கடன் இடர்நேர்வு மதிப்பீட்டு முறைமையியலுக்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. |
| ஜுன் | • 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலக ஒழுங்குவிதிக்கான நாடாளுமன்ற அங்கீகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.<br>• நிலையான செயற்பாட்டு நடைமுறைக் கையேடு தயாரிப்பதற்கு ஆதரவளிப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவித் தூதுக்குழுவொன்று வருகை தந்தது. |
| ஜூலை | • நடுத்தரக்கால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் வடிவமைப்பிற்காக சர்வதேச நாணய நிதியம் – உலக வங்கி ஆகியவற்றின் தொழில்நுட்ப உதவி பெறப்பட்டது |
| ஆகஸ்ட் | • கடன் பதிவுசெய்தல் மற்றும் முகாமைத்துவச் செயல்பாடுகளை நவீனமயமாக்கி, CSDRMS இலிருந்து பொதுநலவாய மெரிடியன் கடன் முகாமைத்துவ முறைமைக்கு வெற்றிகரமாக மாற்றப்பட்டது. |
| செப்டம்பர் | • சந்தை வெளிப்படைத்தன்மை மற்றும் முன்கூட்டியே கணிக்கும் தன்மையை அதிகரிக்கும் பொருட்டு, தொடர்ச்சியான காலாண்டு அரசாங்க பிணையங்கள் ஏல நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.<br>• பிரதான நிர்வாக அலுவலகம், செயற்பாட்டு அலுவலகம் மற்றும் கடைநிலை செயற்பாட்டு அலுவலகம் ஆகியவற்றின் பொறுப்புகளை வரையறுக்கும் பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலக வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன. |
| ஒக்டோபர் | • மேற்பார்வை செய்யப்பட்ட இடைக்கால ஒழுங்குபடுத்தலின் கீழ், இதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டு வந்த கடன் முகாமைத்துவச் செயல்பாடுகளின் நடைமுறை ரீதியான அமுலாக்கம் ஆரம்பிக்கப்பட்டது. |

| மாதம் | முக்கிய அடைவுகள் |
|---|---|
| நவம்பர் | • 2025 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க முதன்மை வியாபாரி கட்டமைப்பு ஒழுங்குவிதிக்கான நாடாளுமன்ற அங்கீகாரம் பெறப்பட்டது.<br>• 2026-2030 ஆம் ஆண்டுகளுக்கான நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த படுகடன் வாங்கல் திட்டம் ஆகியன வடிவமைக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.<br>• முதலீட்டாளர் உறவுகள் மற்றும் தொடர்பாடல் கொள்கை மற்றும் முதலீட்டாளர் உறவுகள் மூலோபாயம் ஆகியன இறுதி செய்யப்பட்டன.<br>• அரசாங்க பிணையங்கள் ஏலச் செயன்முறைக்காக, ஏல வழிகாட்டல் குழு மற்றும் கடன், காசு முகாமைத்துவக் குழு ஆகியன நியமிக்கப்பட்டன. |
| டிசம்பர் | • வருடாந்த கடன் வாங்கல் திட்டம் தயாரிப்பதற்காக சர்வதேச நாணய நிதியம் – உலக வங்கி ஆகியவற்றின் கூட்டுத் தொழில்நுட்ப உதவி பெறப்பட்டது.<br>• பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் நடத்தைவிதிக் கோவை இறுதி செய்யப்பட்டது.<br>• விரிவான வருடாந்த கடன் வாங்கல் திட்டம் வெளியிடப்பட்டது<br>• பொதுப்படுகடன் முகாமைத்துவச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கும் வகையில், உள்நாட்டுச் சந்தையில் அரசாங்க கடன் பிணையங்களை வழங்கும் பொறுப்பு இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பொறுப்பேற்கப்பட்டது. |

# அத்தியாயம் - 2

## பொதுப் படுகடன் மற்றும் அரசாங்கத்தின் படுகடன்

### 2.1 மேன்நோக்கு

2024-ஆம் ஆண்டின் 33-ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம், "அரசாங்கத்தின் படுகடன்", "பொதுப் படுகடன்" ஆகிய எண்ணக் கருக்கிடையிலான வேறுபாட்டைத் தெளிவுபடுத்துகின்றது. அரசாங்கத்தின் படுகடன் என்பது அரசாங்கத்தால் நேரடியாக ஏற்கப்பட்ட பொறுப்புகளைக் குறிக்கும் அதே வேளையில், பொதுப் படுகடன் என்பது அரசாங்கத்தின் படுகடன், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் உத்தரவாதமளிக்கப்பட்ட மற்றும் உத்தரவாதமளிக்கப்படாத படுகடன்கள், மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உத்தரவாதமளிக்கப்பட்ட மற்றும் உத்தரவாதமளிக்கப்படாத படுகடன்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பரந்த எல்லையை உள்ளடக்கியது.

2024-ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைச் சட்டத்தின் பிரிவு 23-க்கு இணங்க, பொதுப் படுகடன் முகாமை அலுவலகம் ஒரு விரிவான பொதுப் படுகடன் களஞ்சியத்தை நிறுவிப் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் அனைத்து அக்கறையாளர்களுக்கும் சுற்று நிருபங்களை அனுப்புவதன் மூலம் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றிடமிருந்து படுகடன் தகவல்களைச் சேகரிக்கும்முறையானசெயன்முறையொன்றை ஆரம்பித்தது. இந்த முயற்சிகளின் விளைவாக, இந்த நிறுவனங்கள் தொடர்பான கணிசமான அளவிலான படுகடன் தரவுகள் வெற்றிகரமாகத் திரட்டப்பட்டு, தரவுக் களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டுள்ளன வினைத்திறன்மிக்க படுகடன் முகாமை, நிதி இடர் கண்காணிப்பு மற்றும் கொள்கை உருவாக்கம் ஆகியவற்றை ஆதரிக்கும் வகையில், முழுமையான மற்றும் நம்பகமான பொதுப் படுகடன் களஞ்சியத்தை உருவாக்கும் நோக்கத்துடன், தரவுப் பரவல், தரம் மற்றும் காலந்தவறாமை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக, பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் தொடர்புடைய நிறுவனங்களுடன் தொடர்ந்து தகவல்களைப் பரிமாறி வருகிறது.

### 2.2 பொதுப் படுகடன் இருப்பு

2024 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 31,062 பில்லியன் (அ.டொலர் 106.2 பில்லியன்) ஆக இருந்த இலங்கையின் மொத்த பொதுப் படுகடன், 2025 ஆம் ஆண்டின் இறுதியில், அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களின் அரசாங்க உத்தரவாதப் படுகடன் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகளின் படுகடன் ஆகியவற்றை உள்ளடக்கி, ரூபா 32,195 பில்லியன் (அ.டொலர் 103.9 பில்லியன்) ஆகக் காணப்பட்டது. அரசாங்கப் படுகடனானது பொதுப் படுகடன் சொத்துப் பட்டியலின் மிகப் பெரிய ஆக்கக் கூறாகவும் மொத்தப் பொதுப் படுகடனில் 96 சதவீதமாகவும் காணப்பட்டது. மேலும், திரும்பப் பெறப்பட்ட உத்தரவாதங்களைத் தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டையும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன்களின் மறுசீரமைப்பை நிறைவு செய்ததையும் பிரதிபலிக்கும் வகையில், அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் படுகடன்

**அட்டவணை 2.1 : 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான பொதுப் படுகடன் நிலுவைகள்**

| | பொதுப் படுகடன் (மொத்தம்) (உத்தரவாதங்கள் உட்பட) | 2024 டிசம்பர் முடிவில் [1] அ.டொலர் மில்லியன் | 2024 டிசம்பர் முடிவில் [1] ரூபா பில்லியன் | 2025 டிசம்பர் முடிவில் [2] அ.டொலர் மில்லியன் | 2025 டிசம்பர் முடிவில் [2] ரூபா பில்லியன் |
|---|---|---|---|---|---|
| அரசாங்கத்தின் படுகடன் | **உள்நாட்டுப் படுகடன்** | **64,571** | **18,892** | **62,963** | **19,434** |
| | ரூபா பெயர் குறிக்கப்பட்ட | 62,413 | 18,261 | 60,489 | 18,751 |
| | வெளிநாட்டு நாணய பெயர் குறிக்கப்பட்ட | 2,158 | 631 | 2,204 | 683 |
| | **வெளிநாட்டுப் படுகடன்** | **36,680** | **10,732** | **37,663** | **11,675** |
| | இருதரப்பு | 10,753 | 3,146 | 10,678 | 3,310 |
| | பலதரப்பு[3] | 12,897 | 3,774 | 14,314 | 4,437 |
| | சந்தைக் கடன்பெறுகைகள் | 13,030 | 3,812 | 12,671 | 3,928 |
| | **அரசாங்கத்தின் மொத்தப் படுகடன்** | **1,01,251** | **29,624** | **1,00,356** | **31,109** |

| பொதுப் படுகடன் (மொத்தம்) (உத்தரவாதங்கள் உட்பட) | | 2024 டிசம்பர் முடிவில் [1] | | 2025 டிசம்பர் முடிவில் [2] | |
|---|---|---|---|---|---|
| | | அ.டொலர் மில்லியன் | ரூபா பில்லியன் | அ.டொலர் மில்லியன் | ரூபா பில்லியன் |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் படுகடன் | மாகாண சபைகள் | – | – | – | – |
| | உள்ளூராட்சி மன்றங்கள் | 20 | 6 | 21 | 6 |
| | ரூபா பெயர் குறிக்கப்பட்ட | | | | |
| | **மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் மொத்தப் படுகடன் [4]** | **20** | **6** | **21** | **6** |
| அ.சொ. தொழில்முயற்சிகளின் படுகடன் | **அ.சொ. தொழில்முயற்சிகளின் உத்தரவாதப் படுகடன்** | **4,896** | **1,432** | **3,484** | **1,080** |
| | ரூபா பெயர் குறிக்கப்பட்ட | 1,857 | 543 | 1,407 | 436 |
| | வெளிநாட்டு நாணய பெயர் குறிக்கப்பட்ட | 3,039 | 889 | 2,077 | 644 |
| | **அ.சொ.தொ. படுகடன்களின் மொத்தப் படுகடன்** | **4,896** | **1,432** | **3,484** | **1,080** |
| | **மொத்த பொதுப் படுகடன் (மொத்தம்)** | **106,166** | **31,062** | **103,861** | **32,195** |

***மூலம்: பொதுப் படுகடன் முகாமை அலுவலகம், பொது நிர்வாக , மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு***

***குறிப்புகள் :***

*[1.] வெவ்வேறு நாணயங்களில் உள்ள தொகைகளை அமெரிக்க டொலராக மாற்றுவதற்கு, 2024 டிசம்பர் 31 இல் இருந்த நாணய மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன (உதாரணமாக. அமெரிக்க டொலர்: இலங்கை ரூபாய் = 292.5833).*

*[2] தற்காலிகமானது, வெவ்வேறு நாணயங்களில் உள்ள தொகைகளை அமெரிக்க டொலர்களாக மாற்றுவதற்கு, 2025 டிசம்பர் 31 இல் இருந்த மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன (உதாரணம். அமெரிக்க டொலர்: இலங்கை ரூபாய் = 309.9944).*

*[3] IMF-இன் EFF 23-26 திட்டத்தின் கீழ் பெறப்பட்ட பெறுகைகள் உள்ளடங்கும்*

*[4] 2025 டிசம்பர் இறுதியில் உள்ளவாறான தற்காலிக நிலை, பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள்*

*[5] தொடர்புடைய நிதி வங்கிகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன*

### வரைபு 2.1: பொதுப் படுகடன் கட்டமைப்பு




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*
***உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன்களை மட்டும் உள்ளடக்கியது*

2024 ஆம் ஆண்டின் இறுதியில் 31,062 பில்லியன் இலங்கை ரூபாவாக இருந்த இலங்கையின் பொதுப் படுகடன் அளவு, 2025 ஆம் ஆண்டில் பெயரளவில் 32,195 பில்லியன் இலங்கை ரூபாயாக சிறிதளவு அதிகரித்தபோதிலும், 2024 ஆம் ஆண்டில் 103.2 சதவீதமாக இருந்தப பொதுப் படுகடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 98.3 சதவீதமாகக் கணிசமாக அளவில் குறைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சி படுகடன் வளர்ச்சியை விஞ்சியதால், பெயரளவிலான பொதுப் படுகடன் இருப்பு ரூபா 31,062 பில்லியனிலிருந்து ரூபா 32,195 பில்லியனாக அதிகரித்தபோதிலும் இந்தச் சாதனை எட்டப்பட்டது. படுகடன் விகிதத்தில் ஏற்பட்டுள்ள குறைவானது, படுகடன் மறுசீரமைப்பு, விவேகமான கடன்பெறுகை நடைமுறைகள், தொடர்ச்சியான அரசிறை ஒருங்கிணைப்பு முயற்சிகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி ஆகியவற்றின் நேர்மறையான தாக்கத்தைப் பிரதிபலிக்கிறது.

முக்கியமாக, பொதுப் படுகடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் ஏற்பட்ட சரிவானது, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு பெற்ற சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் ஒப்புக் கொள்ளப்பட்ட படுகடன் நிலைத்தன்மைப் பாதையுடன் முழுமையாக ஒத்துப்போகிறது. 2025-ஆம் ஆண்டின் இறுதிக்குள் படுகடன் விகிதத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100 சதவீதத்திற்கும் குறைவாகக் கொண்டுவருவது, 2032-ஆம் ஆண்டிற்குள் பொதுப் கடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 சதவீதமாகக் குறைக்கும் நடுத்தர மற்றும் நீண்ட கால படுகடன் நிலைத்தன்மை இலக்கை அடைவதில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வெளிப்படுத்துகிறது.

**வரைபு 2.2 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுப் படுகடன்**




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*
**தற்காலிகமானது*

**2.3 அரசாங்க படுகடன் இருப்பு**

அரசாங்கப் படுகடன் சொத்துப் பட்டியல் என்பது தேசிய ஐந்தொகையின் மிக முக்கியமான கூறுகளில் ஒன்றாகும், மேலும் இது நிதி மற்றும் பேரண்டப் பொருளாதார நிர்வாகத்தில் ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 29,624 பில்லியனாகப் பதிவான அரசின் மொத்தப் படுகடன் நிலுவை, 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 5.0 சதவீத அதிகரிப்புடன் ரூபா 31,109 பில்லியனை எட்டியது. இருப்பினும், அமெரிக்க டொலர் மதிப்பில், நாணய மாற்று விகித சரிவின் தாக்கத்தைப் பிரதிபலிப்பதன் காரணமாக, மத்திய அரசாங்கத்தின் படுகடன் 2025-ல் 101.3 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 100.4 பில்லியன் அமெரிக்க டாலராக சிறிதளவு குறைந்தது.

2025 ஆம் ஆண்டில், இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு பெற்ற சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் விரிவான படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகளை மேற்கொண்ட அதே வேளையில், தனது பொருளாதார மீட்சியையும் தொடர்ந்தது. இந்த முன்னேற்றங்கள் அரசாங்கப் படுகடன் சொத்துப் பட்டியல் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின.

**2.3.1 2025 இறுதியில் உள்ளவாறான அரசாங்கப் படுகடன் பட்டியலின் மீட்பு விவரக்குறிப்பு**

2025 ஆம் ஆண்டின் இறுதி நிலவரப்படி, அரசாங்கத்தின் படுகடன் மீட்பு நிலைப்பாடானது, விரிவான படுகடன் மறுசீரமைப்புச் செயல்முறையின் மூலம் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பிரதிபலிப்பதோடு, குறுகிய காலத்தில் எஞ்சியிருக்கும் மறுநிதியளிப்புச் சவால்களையும் எடுத்துக்காட்டுகிறது. படுகடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள், முதிர்வுக் காலங்களை நீட்டிப்பதன் மூலமும், காலப்போக்கில் படுகடன் திருப்பிச் செலுத்துதலைச் சீராக்குவதன் மூலமும், உடனடிப் படுகடன் சேவை அழுத்தங்களைக் குறைப்பதன் மூலமும், படுகடன் பட்டியலின் முதிர்வு நிலையை கணிசமாக மேம்படுத்தியுள்ளன.

இந்தச் சாதனைகள் இருந்தபோதிலும், 2026-ஆம் ஆண்டில் படுகடன் பட்டியலானது மறுநிதியளிப்புப் பொறுப்புகளின் செறிவைத் தொடர்ந்து எதிர்கொள்கிறது. இதன்மூலம், மொத்தக் படுகடன் முதிர்வுகள் 5,000 பில்லியன் இலங்கை ரூபாயைத் தாண்டுவதுடன் இவற்றில் பெரும்பகுதி உள்நாட்டு திறைசேரி உண்டியல்களின் மீட்புகளாகும். இருப்பினும், இந்தக் குறுகிய காலச் செறிவு பெரும்பாலும் 2026-ஆம் ஆண்டுக்குள் அடங்கியுள்ளது, அதன் பிறகு படுகடன் முறை கணிசமளவில் அதிக சமநிலையானதாகவும் கணிக்கக்கூடியதாகவும் மாறுகிறது.

2028 ஆம் ஆண்டு முதல், வெளிநாட்டுப் படுகடன் சேவைப் பொறுப்புகள் படிப்படியாக அதிகரித்து, 2030களின் நடுப்பகுதி முதல் பிற்பகுதி

வரை ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய தொகையானது ஏறத்தாழ 900 பில்லியன் ரூபாய் முதல் 1,000 பில்லியன் ரூபாய் வரை அதிகரிக்கும். இருப்பினும், வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயல்முறையின் விளைவாக, இந்தக் கடமைகள் ஒரு நீண்ட கால எல்லைக்குள் மிகவும் சீராகப் பிரிக்கப்பட்டுள்ளன; இதன்மூலம், மறுசீரமைப்பிற்கு முன்பு இருந்த பெரிய திருப்பிச் செலுத்தும் ஏற்ற இறக்கங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, படுகடன் திருப்பிச் செலுத்தும் முறையானது, படுகடன் நிலைத்தன்மை நோக்கங்கள் மற்றும் நிர்வகிக்கக்கூடிய நிதித் தேவைகளுக்கு இணக்கமாகவே உள்ளது. 2038-க்குப் பிறகு, படுகடன் சேவைப் பொறுப்புகள் படிப்படியாகக் குறைந்து, அதிகரித்த நிதிச் சுதந்திரத்தை அளித்து, படுகடன் நிலைத்தன்மை மற்றும் பேரண்டப் பொருளாதார நிலைத்தன்மையை நோக்கிய நீண்டகாலப் பாதையை வலுப்படுத்துகின்றன.

**வரைபு 2.3: 2025 இறுதியில் உள்ளவாறான அரசாங்கப் படுகடன் பட்டியலின் மீட்பு விவரம்**




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*
*அந்நிய செலாவணி விகித ஏற்ற இறக்கங்கள் மற்றும் புதிய படுகடன் பெறுகைகள் காரணமாக மாற்றத்திற்கு உட்பட்டது*
*2026-ல் முதிர்வடையவிருக்கும் நிலுவையில் உள்ள திறைசேரி உண்டியல்கள் இதில் அடங்கும்*

### 2.3.2 வெளிநாட்டுப் படுகடன் கட்டமைப்பு பட்டியல்

**செலாவணி அடிப்படையில் வெளிநாட்டுப் படுகடன்**

வெளிநாட்டுப் படுகடனின் செலாவணி அமைப்பு, முக்கிய சர்வதேச ஒதுக்க நாணயங்களிலேயே செறிந்து காணப்பட்டது. சர்வதேச இறையாண்மைக் கடன் பெறுகைகளில் ஆதிக்கப் பங்கைப் பிரதிபலிக்கும் வகையில், வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் அமெரிக்க டொலர் மிகப்பெரிய பங்கைக் கொண்டிருந்தது. சிறப்பு வரைவு உரிமைகள் (SDRகள்), ஜப்பானிய யென், யூரோ மற்றும் சீன யுவான் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட படுகடன்களும் பட்டியலின் குறிப்பிடத்தக்க பகுதிகளாக அமைந்திருந்தன.

வெளிநாட்டுப் படுகடன் பட்டியலின் நாணய அமைப்பு, குறிப்பாக அமெரிக்க டொலர்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புகளின் கணிசமான பங்கின் காரணமாக, அரசாங்கத்தை நாணய மாற்று விகித அபாயத்திற்கு உள்ளாக்குகிறது. ஆகையால், இலங்கை ரூபாய்க்கும் அமெரிக்க டாலருக்கும் இடையிலான நாணய மாற்று விகிதத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், உள்நாட்டு நாணய மதிப்பில் அளவிடப்படும்போது வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் சேவைப் பொறுப்புகளின் மதிப்பில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

நாணய மாற்று விகித அபாயத்தைக் குறைப்பதற்கும், படுகடன் பட்டியலின் மீள்திறனை வலுப்படுத்துவதற்கும், நடுத்தரக் கால அளவில் இலங்கை ரூபாயில் வழங்கப்படும் நிதியுதவியின் பங்கை படிப்படியாக அதிகரிக்கும் ஒரு உத்தியை பொதுப் படுகடன் முகாமை அலுவலகம் பின்பற்றி வருகிறது.




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

### வட்டி விகித வகையின் அடிப்படையில் வெளிநாட்டுப் படுகடன்

2025 ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன்களில் நிலையான வட்டி விகிதச் சாதனங்களே அதிகளவில் தொடர்ந்தும் காணப்பட்டன; இது மாறிவரும் உலகளாவிய நிதி நிலைமைகளை நோக்கமாகக் கொண்ட படுகடன் சேவைப் பொறுப்புகளில் அதிகம் எதிர்வுகூறக் கூடிய தன்மையை வழங்கியது. மாற்றமடையும் வட்டி விகிதப் படுகடன்கள், வெளிநாட்டுப் படுகடன்களின் மீதமுள்ள பங்காக இருந்தன; இவை சர்வதேச அளவுகோல் வட்டி விகித மாற்றங்களால் பாதிக்கப்படக்கூடியவையாக இருந்தன. நிலையான வட்டி விகிதப் படுகடன்களின் ஆதிக்கம்.

வரைபு 2.5 வட்டி விகித வகையின் அடிப்படையில் வெளிநாட்டுப் படுகடன்




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

### படுகடன் வழங்குநர் வகையின் அடிப்படையில் வெளிநாட்டுப் படுகடன்

வெளிநாட்டுப் படுகடன்கள், பலதரப்பு நிறுவனங்கள், இருதரப்புப் படுகடன் வழங்குநர்கள் மற்றும் தனியார் படுகடன் வழங்குநர்களுக்கான கடப்பாடுகளைத் தொடர்ந்து கொண்டிருந்தது. பலதரப்புப் படுகடன் வழங்குநர்களே, சலுகை மற்றும் நீண்ட கால நிதியுதவியின் முக்கிய மூலமாகத் தொடர்ந்து விளங்கினர்; நிலுவையில் உள்ள வெளிநாட்டுப் படுகடனில் கணிசமான பங்கிற்கு அவர்களுக்குரியவையாகும். இருதரப்புப் படுகடனானது, முதன்மையாக உத்தியோகபூர்வ அரச நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதிப் படுகடன் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட படுகடன்களைக் கொண்டிருந்தது. தனியார் படுகடன் வழங்குநர்களின் படுகடன் வெளிப்பாட்டில், சர்வதேச இறையாண்மை முறிகள் (ISBகள்) மற்றும் ஏனைய சந்தை அடிப்படையிலான படுகடன்கள் அடங்கியிருந்தன.

வரைபு 2.6: படுகடன் வழங்குநர் வகையின் அடிப்படையில் வெளிநாட்டுப் படுகடன் கட்டமைப்பு - 2025 இறுதியில் உள்ளவாறானது




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

### 2.3.3 உள்நாட்டுக் படுகடன் பட்டியலின் கட்டமைப்பு

2024 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா. 18,892 பில்லியனாக (அமெரிக்க டொலர் 64.6 பில்லியன்) இருந்த அரசாங்கத்தின் நிலுவையில் உள்ள உள்நாட்டுக் கடன், 2025 டிசம்பர் 31 இல் ரூபா 19,434 பில்லியனாக (அமெரிக்க டொலர் 62.7 பில்லியன்) உயர்ந்துள்ளது. உள்நாட்டுப் படுகடன்கள் அரசாங்கத்தின் படுகடன் பட்டியலில் மிகப் பெரிய ஆக்கக்கூறாகத் தொடர்ந்தும் காணப்படுவதுடன், 2025 ஆம் ஆண்டின் இறுதியல் மொத்த அரசாங்கப் படுகடனில் ஏறக்குறைய 62 சதவீதமாகக் காணப்பட்டது.

**அட்டவணை 2.2: நிலுவையில் உள்ள உள்நாட்டுப் படுகடன்களின் சுருக்கம்**

| மூலம் | நிலுவையில் உள்ள படுகடன்கள் (அ.டொலர் மில்லியன்) | நிலுவையில் உள்ள படுகடன்கள் (ரூபா பில்லியன்) |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் [1] | 10,122 | 3,138 |
| திறைசேரி முறிகள் | 50,219 | 15,567 |
| உள்நாட்டு டொலர் முறிகள் | 50 | 15 |
| தவணைக் கடன்கள் - இலங்கை வங்கி | 1,582 | 491 |
| தவணைக் கடன்கள் - மக்கள் வங்கி | 546 | 169 |
| பாதுகாப்பு அமைச்சின் சுஹுருபாய கடன் கணக்கு | 9 | 3 |
| ஒய்வூதிய பணிக்கொடைக் கடன் கணக்கு | 119 | 37 |
| அபிவிருத்திச் செயற்திட்டக் கடன்கள்[2] | 46 | 14 |
| **மொத்தம்** | **62,693** | **19,434** |

*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

**வரைபு 2.7 : உள்நாட்டுப் படுகடன் உள்ளமைப்பு**




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

*** உள்நாட்டு டொலர் முறிகள், சுஹுருபாயா படுகடன் கணக்கு, ஒய்வூதிய பணக்கொடை படுகடன் கணக்கு, மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டக் கடன்கள்.**

திறைசேரிப் பிணையங்கள் உள்நாட்டு நிதியளிப்பின் முதன்மைக் கருவிகளாகத் தொடர்ந்தும் விளங்குகின்றன. நிலுவையில்

உள்ள திறைசேரி முறிகள் ரூபா 15,567 பில்லியன் (அ.டொலர் 50.2 பில்லியன்) ஆகக் காணப்பட்டது. இது உள்நாட்டுப் படுகடன் இருப்பில் கிட்டத்தட்ட ஐந்தில் நான்கு பங்காகும். அதே நேரத்தில், திறைசேரி உண்டியல்கள் ரூபா 3,138 பில்லியன் (அ.டொலர் 10.1 பில்லியன்) ஆகக் காணப்பட்டன. உள்நாட்டுப் படுகடனின் பிற கூறுகளில் உள்நாட்டு டொலர் முறிகள், அரசுக்குச் சொந்தமான வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட தவணைக் படுகடன்கள், சுஹுருபாயா படுகடன் கணக்கு, ஒய்வூதியப் பணிக்கொடைப் படுகடன் கணக்கு மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டக் கடன்கள் ஆகியவை அடங்கும்.

### செலாவணி அடிப்படையில் உள்நாட்டுப் படுகடன்

நிதி திரட்டுவதற்கான பிரதான மூலமாக உள்நாட்டுச் சந்தையை அரசாங்கம் தொடர்ந்து சார்ந்திருப்பதை பிரதிபலிக்கும் வகையில், உள்நாட்டுக் படுகடன் பட்டியல் பெரும்பாலும் இலங்கை ரூபாவிலேயே அமைந்திருந்தது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில், ரூபாய் பெயர் குறிப்பிடப்பட்ட சாதனங்களின் பெறுமதி ரூபா 18,751 பில்லியனாகவும் (அ.டொலர் 60.5 பில்லியன்), வெளிநாட்டு நாணயப் பெயர் குறிப்பிட்ட உள்நாட்டுக் கடனின் பெறுமதி 683 பில்லியனாகவும் (அ.டொலர் 2.2 பில்லியன்) காணப்பட்டன.

### முதிர்வு காலத்தின் அடிப்படையில் உள்நாட்டுக் படுகடன் பிணையங்களின் உள்ளமைப்பு

நிலுவையில் உள்ள திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளை உள்ளடக்கிய, ஓராண்டுக்குள் முதிர்வடையும் உள்நாட்டுப் படுகடன்கள், 2025 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டுக் படுகடன் இருப்பில் 24.1 சதவீதமாக இருந்தது; மீதமுள்ள 75.9 சதவீதம் 2026 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதிர்வடையும் எனத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த முதிர்வுப் பரவல் இருந்தபோதிலும், 63 சதவீதத்திற்கும் அதிகமான அரசாங்கப் பிணையங்கள் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் முதிர்வடைய உள்ளன. இது, நடுத்தரக் காலத்தில் படுகடன் திருப்பிச் செலுத்துதல்கள் ஒருமுகப்படுத்தப்பட்டிருப்பதையும் அதனுடன் தொடர்புடைய மீள் நிதியீட்ட அபாயத்தையும் பிரதிபலிக்கிறது.

**வரைபு 2.8 முதிர்வுக் காலத்தின் அடிப்படையில் உள்நாட்டுக் படுகடன் பிணையங்கள்**




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

திறைசேரி உண்டியல்களினதும் திறைசேரி முறிகளினதும் முதிர்வுக் காலங்களை மட்டுமே உள்ளடக்கியுள்ளது

### வட்டி விகித வகையின் அடிப்படையில் உள்நாட்டு படுகடன் பிணையங்கள்

**வரைபு 2.9 : வட்டி விகித வகையின் அடிப்படையில் உள்நாட்டுப் படுகடன் பிணையங்கள்**




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

2025 ஆம் ஆண்டின் இறுதியில், உள்நாட்டு அரசாங்கத்தின் படுகடன் பிணையங்கள் பெரும்பாலும் நிலையான வட்டி விகிதத்திலான திறைசேரி முறிகளையே கொண்டிருந்தன; இவை மொத்த நிலுவை இருப்பில் 79 சதவீதத்தைக் கொண்டிருந்தன. பட்டியலில் திறைசேரி உண்டியல்கள் 17 சதவீதமாகவும், மாறும் வட்டி விகிதங்களைக் கொண்ட பிணையங்கள் 4 சதவீதமாகவும் இருந்தன.

# அத்தியாயம் - 3

## படுகடன் பாய்ச்சல்கள்

### 3.1 மேன்நோக்கு

2025ஆம்ஆண்டில்,அரசாங்கம்தனதுநடுத்தரகால கடன் முகாமைத்துவ மூலோபாயத்திற்கு (MTDS) இணங்க, வரவு-செலவுத் திட்டத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், பொருளாதார மீட்சி மற்றும் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதி வளங்களை திரட்டி நிதியளிப்பு மூலோபாயத்தை தொடர்ந்து செயல்படுத்தியது. வெளிநாட்டு நாணய மாற்று அபாயத்திற்கான வெளிப்பாட்டைக் குறைப்பதற்கும், உள்நாட்டு அரசாங்க பிணையங்கள் சந்தையை மேலும் மேம்படுத்துவதற்குமான அரசின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் உள்நாட்டு நிதியளிப்பு முக்கிய நிதி மூலமாகத் தொடர்ந்தது. மேலும், உள்நாட்டு டொலர் முறிகள் (Domestic Dollar Bonds) மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டமை, நிதி மூலங்களைப் பல்வகைப்படுத்துவதில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்ததுடன், உள்நாட்டு நிதிச் சந்தையில் நம்பிக்கையும் திரவத்தன்மை நிலையும் மேம்பட்டுள்ளதை எடுத்துக்காட்டியது.

ஆண்டின் போது கடன் முகாமைத்துவ நடவடிக்கைகள் எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் மேற்கொள்ளப்பட்டதுடன், அவை அரசின் நிதி மற்றும் கடன் பேண்தகுதன்மை இலக்குகளுடன் ஒத்துப்போயின. கடன் சேவைப் பொறுப்புகள் தொடர்ந்து காலத்திற்குள் நிறைவேற்றப்பட்ட போதிலும், நிதியளிப்பு நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீட்டு மாற்றங்களின் காரணமாக நிலுவையிலுள்ள மொத்தக் கடன் இருப்பு அதிகரித்தது. இருப்பினும், தொடர்ச்சியான கடன் மறுசீரமைப்பு முயற்சிகள், மேம்பட்ட நிதிசார் செயல்திறன் மற்றும் மறுநிதியளிப்பு மற்றும் வெளிநாட்டு நாணய மாற்று அபாயங்களை நிர்வகிப்பதில் தொடர்ந்த கவனம் ஆகியவை கடன் தொகுப்பின் ஒட்டுமொத்த வலிமையையும் பேண்தகுதன்மையையும் மேம்படுத்தின. இம்முயற்சிகள் நீண்டகால கடன் பேண்தகுதன்மையை அடையும் நோக்கில் முன்னேற்றத்தையும் ஆதரித்தன.

### 3.2 கடன் வரவுகள் – புதிய கடன் பெறுதல்கள் மற்றும் நிதி விடுவிப்புகள்

2025 ஆம் ஆண்டில், வரவு-செலவுத் திட்டத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்கும், அரசாங்கம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து தொடர்ந்து நிதி திரட்டியது. மொத்த புதிய உள்நாட்டு கடன் பெறுதல்கள் ரூ. 7,761 பில்லியன் ஆக பதிவானது. இதில்: ரூ. 2,398 பில்லியன் திறைசேரி முறிகள் வெளியீட்டின் மூலம் திரட்டப்பட்டது.ரூ. 5,348 பில்லியன் திறைசேரி உண்டியல்கள் மூலம் பெறப்பட்டது. ரூ. 15.5 பில்லியன் உள்நாட்டு டொலர் பத்திரங்கள் மூலம் திரட்டப்பட்டது. உள்நாட்டு நிதியளிப்பு அரசின் முக்கிய கடன் ஆதாரமாகத் தொடர்ந்தது. இது உள்நாட்டு அரசுப் பிணையங்கள் சந்தையை மேம்படுத்துவதற்கும் வெளிநாட்டு நிதியளிப்பின் மீதான சார்பைக் குறைப்பதற்குமான தொடர்ச்சியான கவனத்தை பிரதிபலிக்கிறது.

வெளிநாட்டு நிதியளிப்பைப் பொறுத்தவரை, 2025 ஆம் ஆண்டில் அரசாங்கம் இருதரப்பு மற்றும் பல்தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட 15 புதிய கடன் ஒப்பந்தங்கள் மூலம் 1,228.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (ரூ. 377 பில்லியன்) பெறப்பட்டது. மொத்த வெளிநாட்டு கடன் நிதி விடுவிப்புகள் 1,780.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (ரூ. 539 பில்லியன்) ஆக இருந்தன. இதில் புதியதாக ஒப்பந்தம் செய்யப்பட்ட கடன்களும், ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த கடன்களின் கீழ் பெறப்பட்ட நிதிகளும் அடங்குகின்றன.

2025 ஆம் ஆண்டில், அரசாங்கம் தனது நிதியளிப்பு நடவடிக்கைகளின் நாணய அமைப்பை வெற்றிகரமாக நிர்வகித்தது. அரசின் மொத்த நிதி தேவைகளில் சுமார் 93 சதவீதம் இலங்கை ரூபாயில் மதிப்பிடப்பட்ட கடன் பெறுதல்களால் பூர்த்தி செய்யப்பட்டது. இதில் பெரும்பகுதி திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மூலமாகப் பெறப்பட்டது. இந்நிலை, வெளிநாட்டு நாணய மாற்று அபாயத்தை கட்டுப்படுத்துவதன் மூலமும், உள்நாட்டு அரசுப் பிணையங்கள் சந்தையின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதன் மூலமும், நடுத்தர கால கடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் (MTDS) இலக்குகளை அடைய உதவியாக அமையும்.

**வரைபு 3.1 : உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணய கடன் பெறுதல்கள் அமைவு**




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

*வெளிநாட்டு நாணய (FX) கடன் பெறுதல்களில், வெளிநாட்டு கடன் நிதி விடுவிப்புகள் மற்றும் உள்நாட்டு டொலர் முறிகளில் (DDBs) சர்வதேச நாணய நிதியத்தின் துரித நிதியுதவி வசதி (RFF) திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட 206 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

**3.2.1 மூலவாரியான கடன் பெறுதல்கள் – திட்டமிடப்பட்டவை மற்றும் உண்மையானவை**

2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கடன் பெறுதல் திட்டம், 2025–2029 நடுத்தர கால கடன் முகாமைத்துவ மூலோபாயத்திற்கு இணங்க, பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட கடன் வரம்பிற்குள் அரசின் வரவு-செலவுத் திட்டத் தேவைகளுக்கு நிதியளிப்பதற்கான கட்டமைப்பை உருவாக்கியது. இத்திட்டத்தின் கீழ், திறைசேரி உண்டியல்களின் மீள்புதுப்பித்தலை தவிர்த்து, உள்நாட்டு மூலங்களிலிருந்து ரூ. 3,100 பில்லியன் நிகரக் கடனையும், வெளிநாட்டு மூலங்களிலிருந்து ரூ. 700 பில்லியன் நிகரக் கடனையும் பெறுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது.

**அட்டவணை 3.1: திட்டமிடப்பட்ட மற்றும் உண்மையான கடன் பெறுதல்கள் – 2025**

| மூலம் | திட்டமிடப் பட்டவை (ரூ. பில்.) | உண்மையானவை (ரூ.பில்.) |
|---|---|---|
| வெளிநாட்டு கடன்பெறுதல்கள் | 700 | 539* |
| உள்நாட்டு - தி.முறிகள் | 3,000 | 2,398 |
| உள்நாட்டு - தி.உண்டியல்கள் (நிகர) | 100 | (933) |
| உள்நாட்டு - டொலர் முறிகள் | — | 16 |
| **மொத்த உண்மையான கடன்பெறுதல்கள்** | **3,800 (உச்சவரம்பு)** | **2,020** |

*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

*வெளிநாட்டு நாணய (FX) கடன் பெறுதல்களில், வெளிநாட்டு கடன் நிதி விடுவிப்புகள் மற்றும் உள்நாட்டு டொலர் முறிகளில் (DDBs) சர்வதேச நாணய நிதியத்தின் துரித நிதியுதவி வசதி (RFF) திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட 206 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

2025 ஆம் ஆண்டில், அரசின் உண்மையான கடன் பெறுதல்கள், 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வரம்பை விடக் குறைவாகவே இருந்தன. இது அரசின் நிதிசார் செயல்திறன் தொடர்ந்து மேம்பட்டு வருவதை பிரதிபலிக்கிறது. இந்த நிலை, கடன் பேண்தகுதன்மைக்கான சாதகமான அறிகுறியாகக் கருதப்படுவதுடன், 2024 ஆம் ஆண்டின் பொது நிதி முகாமைத்துவச் சட்டம் இல. 44 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடன் குறைப்பு நோக்கங்களை அடைவதற்கான அரசின் உறுதிப்பாட்டுடனும் ஒத்துப்போகிறது. 2025 ஆம் ஆண்டில், வெளிநாட்டு கடன் பெறுதல்கள் ரூ. 539 பில்லியன் ஆக இருந்தது. இது திட்டமிடப்பட்ட ரூ. 700 பில்லியன் அளவை விடக் குறைவாக இருந்ததற்குக் காரணம், ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த கடன்களின் நிதி விடுவிப்புகள் எதிர்பார்த்த காலத்திற்குப் பின்னர் இடம்பெற்றமையாகும்.

2025 ஆம் ஆண்டில், இலங்கை வெளிநாட்டு நாணயத்தில் மதிப்பிடப்பட்ட உள்நாட்டு கடன் கருவியான உள்நாட்டு டொலர் முறிகளை (DDBs) வெற்றிகரமாக மீண்டும் அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் அரசு உள்நாட்டு சந்தையிலிருந்து 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை திரட்டியது. பொருளாதார நெருக்கடியின் பின்னர் வெளிநாட்டு நாணயத்தில் மதிப்பிடப்பட்ட உள்நாட்டு கடன் கருவி ஒன்று வெளியிடப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும். உள்நாட்டு நிதி அமைப்பில்வெளிநாட்டுநாணயத்திரவத்தன்மை மேம்பட்டிருந்த சூழ்நிலைக்குப் பதிலளிக்கும் வகையில் இந்த வெளியீடு மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பரிவர்த்தனை, முதலீட்டாளர்களின் புதிய நம்பிக்கையை வெளிப்படுத்தியதுடன், அரசின் நிதி ஆதாரங்களை மேலும் பல்வகைப்படுத்துவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது.

**3.2.2 வெளிநாட்டு கடன் நிதி விடுவிப்புகள் மற்றும் பயன்பாடு**

2025 ஆம் ஆண்டில், வெளிநாட்டு கடன் நிதி விடுவிப்புகள் மொத்தமாக 1,780.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆக இருந்தன. இது இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து தொடர்ந்தும் கிடைத்த ஆதரவை பிரதிபலிக்கிறது. சர்வதேச நாணய நிதியம் மிகப்பெரிய நிதி மூலமாக இருந்து, மொத்த நிதி விடுவிப்புகளில் சுமார் 50 சதவீதத்தை வழங்கியது. அதனைத் தொடர்ந்து, ஆசிய அபிவிருத்தி வங்கி மொத்த நிதி விடுவிப்புகளில் 29 சதவீதத்தை வழங்கியது. உலக வங்கி மொத்த நிதி விடுவிப்புகளில் 11 சதவீதத்தை வழங்கியது.

**படம் 3.2: வெளிநாட்டு கடன் விடுவிப்புகள் (கடன் அளிப்பவரினால்)**




***மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்***

***ஏனையவை : சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியம் (IFAD), சவூதி அபிவிருத்தி நிதியம், ஜெர்மனி, நெதர்லாந்து, கொரியா மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.**

**அட்டவணை 3.2 : 2025 ஜனவரி 1 ஆம் திகதி முதல் 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு கடன்களின் நிதி விடுவிப்புகள்.**

| அபிவிருத்தி பங்காளர்/ கடனளிப்பு முகவர் | கடன் விடுவிப்புகள்* *(ஐ.அ.டொ மில்.)* |
|---|---|
| | **கடன்** |
| இருதரப்பு | **57.0** |
| சவூதி நிதியம் | 20.9 |
| ஜப்பான் | 19.2 |
| இந்தியா | 13.1 |
| கொரியா | 1.2 |
| நெதர்லாந்து | 2.6 |
| பல்தரப்பு | **1,723.3** |
| ** சர்வதேச நாணய நிதியம் | 887.7 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 517.3 |
| உலக வங்கி | 201.6 |
| OPEC நிதியம் | 64.2 |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 39.6 |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கி | 9.4 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 3.5 |
| மொத்தம் | **1,780.3** |

***மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்***

***குறிப்பு: பல்வேறு நாணயங்களில் செய்யப்பட்ட நிதி விடுவிப்புகளை அமெரிக்க டொலராக (USD) மாற்றுவதற்காக, ஒவ்வொரு நிதி விடுவிப்பு திகதியிலும் நிலவிய மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.***

***** SDR தொகைகளை அமெரிக்க டொலராக மாற்றுவதற்காக, இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட முன்னைய மாத இறுதிக்கான SDR–USD மாற்று விகிதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.***

****தற்காலிகத் தரவு***

2025 ஆம் ஆண்டில், வெளிநாட்டு கடன் நிதி விடுவிப்புகளில் வரவு-செலவுத் திட்ட ஆதரவு மிகப்பெரிய பங்கைக் கொண்டிருந்தது. ஆண்டின் மொத்த நிதி விடுவிப்புகளில் சுமார் 71 சதவீதம் வரவு-செலவுத் திட்ட ஆதரவிற்காக ஒதுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மனிதாபிமான உதவிக்காக மொத்த நிதி விடுவிப்புகளில் 4.6 சதவீதம் பயன்படுத்தப்பட்டதுடன், சுற்றுலாத்துறை மற்றும் வீதிகள் மற்றும் பாலங்கள் துறைகளுக்கு முறையே 4.0 சதவீதம் மற்றும் 3.0 சதவீதம் ஒதுக்கப்பட்டது. வெளிநாட்டு கடன் நிதி விடுவிப்புகளில் பெரும்பங்கு வரவு-செலவுத் திட்ட ஆதரவிற்காக செலுத்தப்பட்டிருப்பது, நிதி நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் பொருளாதார சீர்திருத்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தொடர்ந்து வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது.

### 3.3 கடன் வெளியேற்றங்கள் – கடன் மீள் கொடுப்பனவுகள்

மத்திய அரசின் மொத்த படுகடன் பொறுப்புகள் என்பது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களுக்கான வட்டி மற்றும் அடிப்படைத் தொகை செலுத்தல்களின் மொத்தத்தையும் உள்ளடக்குகிறது. 2025 ஆம் ஆண்டில், மொத்த படுகடன் சேவைச் செலுத்தல்கள் ரூ. 3,919.8 பில்லியன் ஆக இருந்தன. இதில் உள்நாட்டு படுகடன் சேவைச் செலுத்தல்கள் ரூ. 3,152.8 பில்லியனும் வெளிநாட்டு படுகடன் சேவைச் செலுத்தல்கள் ரூ. 767.0 பில்லியன் ஆகும்.

2025 ஆம் ஆண்டில், மொத்த வட்டி செலுத்தல்கள் 7.0 சதவீதம் குறைந்து ரூ. 2,500.7 பில்லியன் ஆக பதிவானது. 2024 ஆம் ஆண்டில் இது ரூ. 2,689.5 பில்லியன் ஆக இருந்தது. இதில்: உள்நாட்டு வட்டி செலுத்தல்கள் ரூ. 130.9 பில்லியன் குறைந்து ரூ. 2,158.2 பில்லியன் ஆக அமைந்ததுடன், வெளிநாட்டு வட்டி செலுத்தல்கள் ரூ. 57.5 பில்லியன் குறைந்து ரூ. 342.5 பில்லியன் ஆக இருந்தது. வட்டி செலவுகள் குறைந்தமை, நிதிசார் முன்னேற்றங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தளர்வான நாணயக் கொள்கையின் (Accommodative Monetary Policy) பின்னணியில் சந்தை வட்டி விகிதங்கள் தொடர்ந்து குறைந்ததன் ஒருங்கிணைந்த விளைவாகும்.

2025 ஆம் ஆண்டில், மூலதனத் திருப்பிச் செலுத்தல்கள் பின்வருமாறு இருந்தன: உள்நாட்டு அடிப்படைத் தொகை திருப்பிச் செலுத்தல்கள் – ரூ. 994.6 பில்லியன் (திறைசேரி உண்டியல் மீள்புதுப்பிப்புகளை தவிர்த்து) வெளிநாட்டு அடிப்படைத் தொகை திருப்பிச் செலுத்தல்கள் – ரூ. 424.5 பில்லியன். உள்நாட்டு அடிப்படைத் தொகை திருப்பிச் செலுத்தல்கள், 2024 ஆம் ஆண்டில் பதிவான ரூ. 984.8 பில்லியனுடன்

**வரைபு 3.3 : கடன் நிதி விடுவிப்புகளின் பயன்பாடு**




***மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்***
****வேறு = மின்சக்தி மற்றும் வலுசக்தி***

ஒப்பிடுகையில் சற்று அதிகமாக இருந்தன. இதற்கு முக்கிய காரணமாக, ஆண்டின் போது ரூ. 18.1 பில்லியன் பெறுமதியான நிலுவையிலிருந்த திறைசேரி உத்தரவாதப் பொறுப்புகள் தீர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**அட்டவணை 3.3: அரசாங்க படுகடன் சேவை செலுத்தல்கள் —2025 (ரூ.பில்.)**

| வகை | அடிப்படை | வட்டி | மொத்தம் |
|---|---|---|---|
| உள்நாடு | 994.63 | 2,158.16 | 3,152.79 |
| வெளிநாடு | 424.48 | 342.52 | 767.00 |

*மூலம்: திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

2025 ஆம் ஆண்டில், அரசாங்கம் தனது திறைசேரி பணப் பாய்வுகளிலிருந்து ரூ. 1,403 பில்லியனை கடன் சேவைச் செலுத்தல்களுக்காக பயன்படுத்தியது. குறிப்பாக, இந்த நிதி திறைசேரி உண்டியல்களின் மீள்செலுத்தலுக்கும் மற்றும் திறைசேரி முறிகளின் கூப்பன் வட்டி செலுத்தல்களுக்கும் பயன்படுத்தப்பட்டது.

### 3.4 நிகரக் கடன் பாய்ச்சல்கள்

2025 ஆம் ஆண்டில், அரசாங்கம் ரூ. 609 பில்லியன் (சுமார் 1,965 மில்லியன் அமெரிக்க டொலர்) அளவிலான நிகரக் கடன் ஓட்டத்தை பதிவுசெய்தது. இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட கடன் திருப்பிச் செலுத்தல்களின் ஒருங்கிணைந்த விளைவாகும். திறைசேரி முறிகள் கடன் இருப்பு அதிகரிப்பிற்கு முக்கிய பங்களிப்பை வழங்கின. புதிய பத்திர வெளியீடுகள், முதிர்வடைந்த பத்திரங்களின் பெறுமதியை விட குறிப்பிடத்தக்க அளவில் அதிகமாக இருந்ததால், ரூ. 1,429 பில்லியன் நிகர வரவு உருவானது. மேலும், வெளிநாட்டு நிதியளிப்பிலிருந்து ரூ. 105 பில்லியன் நிகர வரவு கிடைத்ததுடன், மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட உள்நாட்டு டொலர் முறிகள் மூலம் ரூ. 16 பில்லியன் நிகர வரவு பெறப்பட்டது.

இந்த அதிகரிப்புகள், பின்வரும் நிகர மீள்செலுத்தல்களால் ஓரளவு ஈடுசெய்யப்பட்டன: திறைசேரி உண்டியல்களின் நிகர மீள்செலுத்தல்கள் – ரூ. 933 பில்லியன் பிற உள்நாட்டு கடன்களின் மீள்செலுத்தல்கள் – ரூ. 7 பில்லியன் நிகர நிதியளிப்பு நடவடிக்கைகளுக்கு அப்பால், கடன் இருப்பு மதிப்பீட்டு மற்றும் கணக்கியல் சரிசெய்தல்களாலும் பாதிக்கப்பட்டது. நாணய மாற்று விகித இயக்கங்கள் காரணமாக நிலுவையிலுள்ள கடன் இருப்பு ரூ. 823 பில்லியனால் அதிகரித்தது. மறுசீரமைக்கப்பட்ட கடன்களின் மூலதனமாக்கல் மேலும் ரூ. 53 பில்லியன் அதிகரிப்பை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, 2024 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 29,624 பில்லியனாக இருந்த மொத்த அரசுக் படுகடன் இருப்பு, 2025 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 31,109 பில்லியனாக உயர்ந்தது.அதாவது, 2024 ஆம் ஆண்டு இறுதியிலிருந்து 2025 ஆம் ஆண்டு இறுதி வரை, மொத்த அரசுக் கடன் இருப்பு ரூ. 1,485 பில்லியனால் அதிகரித்தது.

**அட்டவணை 3.4 - 2025 இல் படுகடன் பாய்ச்சல்கள்**

| | வெளியீடுகள்/ நிதி விடுவிப்புகள் ரூ. பில். | மீள்செலுத்தல்கள் ரூ. பில். | நிகர படுகடன் பாய்ச்சல் ரூ. பில். |
|---|---|---|---|
| தி-உண்டியல்கள் * | 5347 | 6280 | (933) |
| தி - முறிகள் | 2398 | 969 | 1429 |
| வெளிநாட்டு | 539** | 434 | 105 |
| உள்நாட்டு டொலர் முறிகள் | 16 | 0 | 16 |
| வேறு உள்நாட்டு கடன்கள் | 0 | 7 | (7) |
| **நிகர படுகடன் பாய்ச்சல் 2025** | **8,300** | **7,691** | **609** |
| மதிப்பீட்டு மற்றும் கணக்கீட்டு சரிப்படுத்தல்கள் | | | |
| மூலதனமாக்கப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட கடன்கள் | | | 53 |
| பரிவர்த்தனை விகித மாற்றங்களின் தாக்கம் | | | 823 |
| **2024.12.31 முதல் 2025.12.31 வரையிலான கடன் இருப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்.** | | | **1485** |

***மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்***

****இடைப்பட்ட ஆண்டுகளில் முதிர்வடையும் கடன்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.***

*****சர்வதேச நாணய நிதியத்தினால் துரித நிதியுதவி வசதி திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட 206 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.***

# அத்தியாயம் - 4

## அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் பொறுப்புக்களின் செலவு மற்றும் இடர்நேர்வுக் குறிகாட்டிகள்

### 4.1 மேன்நோக்கு

அரச படுகடன் நிலைபேறானதன்மையினை நிலைநிறுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளில் 2025 ஆம் ஆண்டு ஒரு முக்கிய முன்னோக்கிய அடியெடுப்பினைக் குறித்துநின்றது. பாரிய கடன் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள், வலுவான அரசிறைச் செயலாற்றுகை மற்றும் மதிநுட்பமான கடன் முகாமைத்துவ உபாயமார்க்கங்கள் என்பன இதற்கு ஆதாரமாய் அமைந்தன. 2024 ஆம் ஆண்டின் முடிவில் முகப்பெறுமதியிலான அரசாங்கக் கடன் இருப்பு 29,624 பில்லியன் இலங்கை ரூபாவாக இருந்து 31,109 பில்லியன் இலங்கை ரூபாவாக அதிகரித்த போதிலும், கடனுக்கும் மொத்தத் தேசிய உற்பத்திக்குமான விகிதாசாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் கடன் சுமையானது தொடர்ச்சியாக இலகுபெற்றது. வட்டிக் கொடுப்பனவு நீங்கலான அரசாங்கத்தின் வருமான மிகையுடன் செயலாற்றுகை வலுப்பெற்றதுடன் இது சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கினை விடக் கிட்டத்தட்ட இரட்டிப்பாகக் காணப்பட்டது. அத்துடன், வட்டிக் கொடுப்பனவுக்கும் வருமானத்திற்குமான விகிதாசாரம் சடுதியாகக் குறைவடைந்து திடமான வருமான வளர்ச்சியினையும் குறைவான கடன்பாட்டுச் செலவினையும் பிரதிபலித்தது.

அரசாங்கத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையான வருமான முதலீடுகளின் இடர்நேர்வு பற்றிய மதிப்பீடு கணிசமான முன்னேற்றங்களை எட்டியது. வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட கடன் மறுசீரமைப்புச் செயற்பாடு கடன் முதிர்வுக் காலத்தினை 2042 இனால் நீட்டித்தது. இது, முதிர்வுக் காலத்திற்கான சராசரிக் காலத்தில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தி அண்மைக்கால மீள்நிதியளிப்பு அழுத்தத்தில் கணிசமான குறைவினை ஏற்படுத்தியது. நிலையான விகிதக் கடன் பங்கு தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டு வட்டி விகிதத் தளம்பல்களுக்கு உட்படுவதை மட்டுப்படுத்திய அதேவேளை திறைசேரி உண்டியல்களின் பங்கில் தொடர்ச்சியாக ஏற்பட்ட குறைப்பு உள்நாட்டுக் கடன் முதிர்வுக் கட்டமைப்பினை வலுப்படுத்தியது. மேலும், உயர் அளவிலான மேலதிக பண இருப்பினாலும் முகாமைத்துவம் செய்யக்கூடிய கடன் சேவைக் கடப்பாடுகளினாலும் ஆதாரப்படுத்தப்பட்ட புறக் கடன் பாதிப்புறுநிலைக் குறிகாட்டிகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் பொறுப்புக்களின் மீண்டெழுந்தன்மையினை அதிகரித்து நீண்ட காலக் கடன் நிலைபேறானதன்மையினை நோக்கிய முன்னேற்றத்தினை வலுப்படுத்தின.

### 4.2 அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் பொறுப்புக்களின் செலவு

**வரை 4.1 : கடந்த 10 வருடத்தில் அரசாங்கக் கடனுக்கும் மொத்தத் தேசிய உற்பத்திக்குமான விகிதாசாரம்**




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம், இலங்கை மத்திய வங்கி*

2025 ஆம் ஆண்டில், அரசாங்கம் அரசிறை நிலைபேறானதன்மைக் குறிக்கோள்களுக்கு உதவிய அதேவேளை அதன் படுகடன் முகாமைத்துவ நிலையினைத் தொடர்ந்தும் வலுப்படுத்தியது. 2024 ஆம் ஆண்டின் முடிவில் 29,624 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அரசாங்கத்தின் மொத்தக் கடன் இருப்புடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டின் முடிவில் இது 31,109 பில்லியன் ரூபாவாக மிதமாக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகளைப் பிரதிபலிப்பதுடன் நாணய மாற்றச் சமனிலை மாற்றங்கள் நாணய மாற்றுப் பெறுமதித் தேய்வினை ஏற்படுத்தின. முகப்பெறுமதிக் கடனில் ஏற்பட்ட அதிகரிப்பினைத் தாண்டி, ஒட்டுமொத்தக் கடன் சுமை கணிசமாக இலகுநிலையடைந்தது.

2025 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிரதான அடைவு, கடனுக்கும் மொத்தத் தேசிய உற்பத்திக்கும் இடையிலான விகிதாசாரம் தொடர்ச்சியாக 95 சதவிகிதமாக வீழ்ச்சியடைந்தமையாகும். இது 2024 ஆம் ஆண்டில் 98.4 சதவிகிதமாக இருந்து இவ்வாறு குறைவடைந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட உச்ச நிலையினை விட மிகக் குறைவானதாகும். பொருளாதார வளர்ச்சியும் வலுப்படுத்தப்பட்ட அரசிறைச் செயலாற்றுகையும் கடன் வளரச்சியினை விஞ்சிச் சென்று மிகவும் நிலைபேறான கடன் நிலைப்பாட்டினை ஏற்படுத்தியமையினையே இந்த முன்னேற்றம் சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கைப் பொருளாதாரம் 2025 ஆம் ஆண்டில் நெருக்கடிக்குப் பின்னரான அதன் மீளலைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு, இரண்டாவது தொடர்ச்சியான வருடமாகச் சுமார் 5.0 சதவிகித உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சியினைப் பதிவுசெய்து நிலைபெற்ற பொருளாதார விரிவாக்கத்தினைப் பிரதிபலித்து, 2024 ஆம் ஆண்டில் 30,096 பில்லியனாக் காணப்பட்ட பெயரளவு மொத்த தேசிய உற்பத்தி 2025 முடிவில் 32,751 பில்லியனாக அதிகரித்தது

அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் தொடர்ந்தும் நன்கு சமனிலைப்படுத்தப்பட்டு, உள்நாட்டுக் கடன், மொத்தக் கடனின் 62.5 சதவிகிதமாகக் காணப்பட்டு வெளிக் கடனின் 37.5 சதவிகிதத்தினைப் பிரதிபலித்தது. உள்நாட்டு நிதியிடலில் தொடர்ந்தும் தங்கியிருத்தல் புற இடர்நேர்வுகளுக்குஉட்படுவதைக்குறைப்பதற்கு உதவிய அதேவேளை, உள்நாட்டுக் கடன் சந்தை விருத்திக்கும் உதவியது.

கடன் குறிகாட்டிகளில் ஏற்பட்ட முன்னேற்றம் வருடத்தின் போது அடையப்பட்ட வலுவான அரசிறைச் செயலாற்றுகையினால் மேலும் ஆதாரப்படுத்தப்பட்டது. இது, கடந்தசாப்தத்தில் பதிவுசெய்யப்பட்ட உயர் மட்டமான மொத்தத் தேசிய உற்பத்தியின் 5.36 சதவிகித வட்டிக் கொடுப்பனவு நீங்கலான அரசாங்கத்தின் வருமான மிகையினை உள்ளடக்குகின்றது.

**கட்டம் 01 : ஆரம்ப மீதி**

**2024 ஆம் ஆண்டில் காணப்பட்ட 650 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் முதன்மை நிலுவை 1756 பில்லியனாக அதிகரித்து அரசிறை நிலை வலுப்பட்டது. மொத்த தேசிய உற்பத்தியின் பங்காக, 2024 ஆம் ஆண்டில் 2.16 சதவிகிதமாகக் காணப்பட்ட முதன்மை நிலுவை 2025 ஆம் அண்டில் 5.36 சதவிகிதமாகக் காணப்பட்டு பத்து வருட காலத்தில் வலுவான செயலாற்றுகையினைப் பிரதிபலித்த. இத்தன்னிலையான முன்னேற்றம் தொடர்ச்சியான அரசிறைத் திடப்படுத்தலையும் வலுவான வருமானச் செயலாற்றுகையினையும் மதிநுட்பமான செலவு முகாமைத்துவத்தினையும் பிரதிபலிக்கின்றது. வட்டிக் கொடுப்பனவு நீங்கலான அரசாங்கத்தின் வருமான மிகை டிட்வா சூறாவளியின் தாக்கத்தினையும் தாண்டி மொத்த தேசிய உற்பத்தியின் 5 சதவிகிதம் என்ற நிலையினை அடைந்தமை கடன் நிலைபேறானதன்மையினைக் கணிசமாக அதிகரித்து, முதலீட்டாளர் நம்பிக்கையினை வலுப்படுத்தி, எதிர்காலப் பொருளாதாரச் சவால்களை நிவர்த்திப்பதற்கு பாரிய அரசிறைத் தளத்தினை வழங்குகின்றது**

வரைபு 4.2 ஆரம்ப மீதி




*மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு*

மொத்தத்தில், 2025 ஆம் ஆண்டு கடன் நிலைபேறானதன்மையின் வலுப்படுத்தலுக்கான ஆண்டாகக் காணப்பட்டது. இதன் பண்புகளாக மேம்பட்ட அரசிறைப் பலாபலன்கள், மொத்தத் தேசிய உற்பத்தி தொடர்பில் குறைவடையும் கடன் சுமை, மற்றும் நிலையுறுதியான மற்றும் மீண்டெழுந்தன்மையுடைய அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் தொகையினைப் பேணுகின்றமை தொடர்பிலான முன்னேற்றம் என்பன காணப்பட்டன.

#### 4.2.2 மொத்த உள்நாட்டு உற்பத்திகளுக்கான படுகடன் மீள் கொடுப்பனவுகள்

**வரைவு 4.3 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் படுகடன் மீள் கொடுப்பனவு**




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம், இலங்கை மத்திய வங்கி*

மொத்தத் தேசிய உற்பத்திக்கும் புறக் கடன் சேவைக்குமான விகிதாசாரம் 2024 ஆம் ஆண்டில் 1.68 சதவிகிதமாக இருந்து 2025 ஆம் ஆண்டில் 2.17 சதவிகிதமாக அதிகரித்து புறக் கடன் சேவைக் கொடுப்பனவுகளின் படிப்படியான இயல்பாக்கத்தினைப் பிரதிபலித்தது. இந்த அதிகரிப்பினைத் தாண்டி, இந்த விகிதாசாரமானது மொத்தத் தேசிய உற்பத்தியின் 4.5 சதவிகித எல்லையான சர்வதேச நாணய நிதியக் கடன் நிலைபேறானதன்மைப் பகுப்பாய்விற்கு மிகவும் கீழே தொடர்ந்து காணப்பட்டு இலங்கையின் புறக் கடன் நிலைபேறானதன்மையில் ஏற்பட்ட தொடரச்சியான முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டியது. புறக் கடன் மறுசீரமைப்பின் வெற்றிகரமான பூர்த்தியானது புறக் கடன் முதிர்வுக் காலப்பகுதியினை ஒரு வருடத்தில் இருந்து பல வருடங்களுக்குப் பரவலாக்கி, கடன்களை மீளச் செலுத்துவது குவிவதைக் குறைத்து நடுத்தவணையின் போது இடர்நேர்வுகளுக்கு மீள் நிதியிட்டது.

#### 4.2.3 அரசாங்க வருமானத்திற்கான வட்டிக் கொடுப்பனவு

**வரைவு 4.4 : வருமானத்திற்கான வட்டி கொடுப்பனவு**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

2024 ஆம் ஆண்டு 4,091 பில்லியனாகக் காணப்பட்ட மொத்த வருமானம் 5,486 பில்லியனாகக் கணிசமாக அதிகரித்த அதேவேளை, வட்டிக் கொடுப்பனவுகள் 2024 ஆம் ஆண்டின் 2690 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2502 பில்லியனாகக் குறைவடைந்தன. இதற்கான பிரதான காரணம் உள்நாட்டுப் பிணையச் சந்தைகளுடன் தொடர்புற்ற குறைவான வட்டிச் செலவுகளாகும். உள்நாட்டுக் கடன் பெறல் செலவுகளில் ஏற்பட்ட குறைவு சாதகமான சந்தை நிலைமைகளையும் முனைப்பான கடன் முகாமைத்துவ நடவடிக்கைகளையும் இடமளிக்கும் நாணயக் கொள்கை நடவடிக்கைகளையும் பிரதிபலிக்கின்றது.

இதன் விளைவாக, வட்டிக் கொடுப்பனவுக்கும் வருமானத்திற்கும் இடையிலான விகிதாசாரம் 2025 ஆம் ஆண்டில் 46 சதவிகிதமாகச் சடுதியாகக் குறைவடைந்தது. இது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுமார் 66 சதவிகிதமாகவும் 2023 ஆம் ஆண்டில் ஒப்பிடுகையில் 80 சதவிகிதத்திற்கும் அதிகமானதாகவும் காணப்பட்டது. இது ஆறு வருட காலப்பகுதியில் மிகக் குறைவான விகிதாசாரத்தினைக் குறிப்பதுடன் அரசிறை ஆற்றலின் கணிசமான வலுவினைப் பிரதிபலிக்கின்றது. இந்த முன்னேற்றம், வருமான வளர்ச்சி அரச படுகடனின் வட்டிக் கொடுப்பனவுச் செலவின் அதிகரிப்பினை விஞ்சியுள்ளதைச் சுட்டிக்காட்டுவதுடன் கடன் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவைப்படும் அரசாங்க வருமானத்தின் விகிதாசாரத்தினையும் குறைக்கின்றது.

மொத்தத்தில், 2025 ஆம் ஆண்டு கடன் தாங்குதிறனில் கணிசமான முன்னேற்றத்தினைக் காட்டிய ஆண்டாக அமைந்ததுடன் குறைக்கப்பட்ட உள்நாட்டுக் கடன் செலவுகள் இதற்குக் காரணமாக அமைந்தன. இது 2,158 பில்லியனாகக் காணப்பட்டது (இது 2024 ஆம் ஆண்டில் உள்ளதை விட 5.7 சதவிகிதக் குறைப்பாகும்). மேலும் வலுவான வருமானச் செயலாற்றுகையும் இதற்கான காரணமாகும். இது அரசாங்க நிதிகள் மீது கணிசமான அளவு குறைவான கடன் மீளச் செலுத்தல் சுமையினை ஏற்படுத்தியது.

**2025 பிரதான அடைவுகள்**

- கடனுக்கும் மொத்த தேசிய உற்பத்திக்கும் இடையிலான விகிதாசாரம் 95 சதவிகிதமாக் குறைவடைந்து தொடர்ச்சியாகக் கீழ்நோக்கிய போக்கினைக் காட்டி கடன் நிலைபேறானதன்மையினை மேம்படுத்தியது.
- வட்டிக் கொடுப்பனவுக்கும் வருமானத்திற்கும் இடையிலான விகிதாசாரம் 46 சதவிகிதமாகக் குறைவடைந்தமை.
- உள்நாட்டுக் கடன் தொடர்ந்தும் நிதியிடலுக்கான பிரதான மூலமாக இருக்கையில், சமனிலையான ஒட்டுமொத்தக் கடன் பொறுப்பு பேணப்பட்டது.
- வருமான வளர்ச்சி வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பெருமளவுக்கு விஞ்சியது.
- கடன்களை மீளச் செலுத்தும் அரசாங்கத்தின் இயலுமை முன்னேற்றமடைந்து பொது நிதிகள் மீதான அழுத்தம் குறைக்கப்பட்டது.
- குறைவான கடன் மீளச் செலுத்தல் சுமையானது அரசிறைத் திடப்படுத்தலை அடைவதற்கு உதவியளித்து நீண்ட காலக் கடன் நிலைபேறானதன்மைக் குறிக்கோள்களுக்கும் உதவியளிக்கின்றது.

### கட்டம் 2: நாணயக் கொள்கை நிலைப்பாடு

2025 ஆம் ஆண்டின் போது, நாணயக் கொள்கை நிலைப்பாடு மிகவும் ஒத்துப்போகும் இயல்புடையதாக மாறியது. இதன் போது வணிக வங்கிகளுக்கான வட்டி வீதம், நியம வைப்பு வசதி வீதம் மற்றும் நியமக் கடன் வழங்கல் வசதி வீதம் என்பன இலங்கை மத்திய வங்கியினால் ஒவ்வொன்றும் 25 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டன. சந்மை வட்டி வீதம் இதற்கான பதிற்செயற்பாடாகப் பொதுவாக வீழ்ச்சியடைந்த நிலையில் மாற்றமானது கடன் வழங்கல் வீதங்களை விட வைப்பு வீதங்களுக்கு உறுதியானதாக் காணப்பட்டது. அதேவேளை, 1 வருட திறைசேரி உண்டியல் விளைவு 51 அடிப்படைப் புள்ளிகளால் குறைவடைந்த அதேவேளை மேம்பட்ட சந்தை நிலைமைகளையு குறைவான வட்டி வீத எதிர்பார்ப்புக்களையும் பிரதிபலித்த். மொத்த்தில் வட்டி வீதம் 2025 ஆம் ஆண்டின் போது குறைக்கப்பட்டு கடன் நிலைமைகளுக்கு உதவியளித்து பொருளாதாரம் முழுவதிலும் நிதியிடல் செலவுகளைக் குறைத்தன.

**வரைவு 4.5 : நாணயக் கொள்கை நிலைப்பாடு**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

### 4.3அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் பொறுப்புக்களின் இடர்நேர்வு

### 4.3.1 வட்டி வீத இடர்நேர்வு

**நிலையான வீதக் கடனின் பங்கு**

2025 முடிவில், அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் பொறுப்புக்களில் 88 சதவிகிதம் நிலையான வீதக் கருவிகளாக இருந்தன. இது, வட்டி வீத இடர்நேர்வினைக் குறைப்பதை

நோக்கமாகக் கொண்ட ஒரு மதிநுட்பமான கடன் முகாமைத்துவ உபாயமார்க்கத்தினைப் பிரதிபலிக்கின்றது. குறிப்பாக, உள்நாட்டு நாணயக் கடன் பொறுப்பு, 96 சதவிகிதத்தில், நிலையான வீதக் கடனின் உயர் பங்கினைப் பதிவுசெய்திருந்தது. இது உள்நாட்டுச் சந்தை வட்டி வீதங்களில் தளம்பல்களுக்கு வரையறுக்கப்பட்ட அளவுக்கு உட்படுவதைப் பிரதிபலிக்கின்றது. வெளிநாட்டு நாணயக் கடன் பொறுப்பும் 78 சதவிகிதத்தில் நிலையான வீதப் பொறுப்புக்களில் ஒரு தன்னிலையான விகிதாசாரத்தினைப் பேணி, உலகளாவிய வட்டி வீதங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களைத் தாண்டி கடன் மீளச் செலுத்தல் செலவுகளில் உறுதித்தன்மையினை வழங்குகின்றது.

**வரைவு 4.6 : வட்டி வீத வகை**




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

**வட்டியற்ற கடன்களும் திறைசேரி உண்டியல்களும் கணக்கீட்டுக்காக நிலையான வீதக் கடன்களாகக் கருதப்பட்டன*

உள்நாட்டுக் கடன் பொறுப்புக்களிலும் வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களிலும் நிலையான வீதக் கடன்களின் செல்வாக்கு எதிர்கால வட்டிக் கொடுப்பனவுகளின் எதிர்வுகூறும் தன்மையினை அதிகரித்துப் பாதகமான வட்டி வீத நகர்வுகளுக்கான அரசாங்கத்தின் பாதிப்புறுநிலையினைக் குறைக்கின்றது. இந்தச் சேர்க்கையானது மீள்நிதியளித்தல் மற்றும் மீள்விலையிடல் இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கடன் நிலைபேறான தன்மைக்கு உதவியளிக்கும் அதேவேளை, சிறந்த வரவு செலவுத்திட்ட உறுதிநிலைக்கும் அரசிறைத் திட்டமிடலுக்கும் பங்களிப்பு வழங்குகின்றது.

### 4.3.2 வட்டி விகித மறுநிர்ணயத்துக்கான சராசரிக் காலம் (ATR)

அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் பொறுப்புக்களுக்கான வட்டி விகிதத்தினை மறுநிர்ணயம் செய்வதற்கான சராசரிக் காலம் 2025 ஆம் ஆண்டின் முடிவின் போது 6.0 வருடங்களாகக் காணப்பட்டது. அந்நியச் செலாவணிக் கடன் பொறுப்புக்களின் வட்டி விகித மறுநிர்ணயத்துக்கான சராசரிக் காலம் 7.9 வருடங்களாகக் காணப்பட்டதுடன் 4.5 வருடங்கள் எனும் உள்நாட்டு நாணயக் கடன் பொறுப்புக்களின் வட்டி விகித மறுநிர்ணயத்துக்கான சராசரிக் காலத்தினை விட இது கணிசமான அளவு உயர்வானதாகும். அந்நியச் செலாவணிக் கடன்கள் அவற்றின் நீண்ட கால வட்டி மறுநிர்ணயக் காலப்பகுதிகள் மற்றும் நிலையான விகிதக் கருவிகளின் உயர் பங்கு என்பவற்றின் காரணமாகக் குறுகிய கால வட்டி விகிதத் தளம்பல்களுக்குக் குறைவாக உட்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றன. மாறாக, உள்நாட்டு நாணயக் கடன் பொறுப்புக்களின் சார்பளவில் குறைவான வட்டி விகித மறுநிர்ணயத்துக்கான சராரசரிக் காலப்பகுதியானது சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கான பாரிய உணர்திறனைக் கொண்டுள்ளது. இதற்கான காரணம், குறுகிய முதிர்ச்சிக் கட்டமைப்பும் உள்நாட்டுக் கடன் பெறல் சாதனங்களின் மீள்நிதியளித்தல் பண்புகளுமாகும்.

### 4.3.3 மொத்தக் கடன்கள் மற்றும் உள்நாட்டுக் கடன்கள் என்பவற்றுக்கான திறைசேரி உண்டியல்களின் சதவிகிதம்

**வரைபு 4.7 : மொத்த படுகடன் மற்றும் உள்நாட்டு படுகடனுக்கான திறைசேரி உண்டியல்கள்**




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

அரசாங்கத்தின் ஒட்டுமொத்தப் படுகடன் மற்றும் உள்நாட்டுக் கடன் என்பவற்றில் திறைசேரி உண்டியல்களின் பங்கு 2025 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது. இது, குறுகிய காலத்திற்குக் கடன் பெறுவதில் தங்கியிருத்தலைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் உபாயமார்க்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தினையும் ஒட்டுமொத்தக் கடன் பொறுப்புக்களின் முதிர்வுக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் உபாயமார்க்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தினையும் சுட்டிக்காட்டுகின்றது.

அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன்களில் திறைசேரி உண்டியல்கள் 2025 ஆம் ஆண்டில் 10.1 சதவிகிதத்தினைப் பிரதிபலித்தன. இது 2024 ஆம் ஆண்டில் காணப்பட்ட 14.06 சதவிகிதத்தினையும் 2023 ஆம் ஆண்டில் காணப்பட்ட 14.04 சதவிகிதத்தினையும் 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட 14.93 சதவிகிதத்தினையும் விடக் குறைவானதாகும். முன்னைய வருடங்களில் இருந்து இவ்வாறு 4 சதவிகிதப் புள்ளிகளால் கிட்டத்தட்ட வீழ்ச்சியடைவது நீண்ட கால நிதியிடல் கருவிகளை நோக்கிய பாரிய நகர்வினைச் சுட்டிக்காட்டுவதுடன் இது மீள்நிதியிடல் இடர்நேர்வுகளையும் கடனைப் புதுப்பிக்கும் இடர்நேர்வுகளையும் குறைப்பதற்கு உதவுகின்றது.

இதேபோன்று, 2024 ஆம் ஆண்டின் 22.04 சதவிகிதத்துடனும் 2023 ஆம் ஆண்டின் 24.00 சதவிகிதத்துடனும் 2022 ஆம் ஆண்டின் 28.32 சதவிகிதத்துடனும் ஒப்பிடுகையில், குறிப்பாக உள்நாட்டுக் கடன்களில் திறைசேரி உண்டியல்களின் பங்கு 2025 ஆம் ஆண்டில் 16.15 சதவிகிதமாகக் காணப்பட்டது. நான்கு வருட காலப்பகுதியின் போது இவ்வாறு திடமாகக் குறைவடைந்தமையானது, இடைக்கால மற்றும் நீண்ட காலப் பிணையங்களின் அதிகரித்த பயன்பாடு மூலம் கடன் முதிர்வுக் காலங்களை நீட்டிப்பதில் அரசாங்கத்தின் வெற்றியினையே எடுத்து விளக்குகின்றது.

### 4.3.4 மீள்நிதியிடல் இடர்நேர்வு

**அட்டவணை 4.1: மீள்நிதியிடல் இடர்நேர்வுக் குறிகாட்டிகள்**

| குறிகாட்டி | வெளி | உள்நாடு | மொத்தம் |
|---|---|---|---|
| முதிர்வுக்கான சராசரிக் காலம் - வருடங்கள் | 9.6 | 4.7 | 6.8 |
| 1 வருடத்தில் முதிர்வுறும் கடன்கள் (மொத்தக் கடனின் விகிதாசாரம்) | 3.4 | 24.3 | 15.2 |
| 1 வருடத்தில் முதிர்வுறும் கடன்கள் (மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவிகிதமாக) | 1.5 | 14.2 | 15.8 |

*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

இலங்கையின் மீள்நிதியிடல் இடர்நேர்வு 2025 ஆம் ஆண்டில் கணிசமாக முன்னேற்றமடைந்தது. மதிநுட்பமான கடன் மறுசீரமைப்பின் வெற்றிகரமான பூர்த்தி மற்றும் உள்நாட்டில் திறைசேரி உண்டியல்களின் விநியோகத்தினைக் குறைத்தல் மற்றும் திறைசேரி உண்டியல்களைச் சார்ந்திருத்தலைக் குறைத்தல் போன்ற முதிர்வுப் பொறுப்புக்களை நீட்டித்தல் என்பன இதற்கு உதவின. இந்த நடவடிக்கைகள் கடன் முதிர்வுகளை நீட்டிப்பதற்கு உதவியதுடன் எதிர்காலக் கடன் முதிர்வுத் திகதிகளின் பரவலாக்கத்திற்கும் உதவியளித்து மொத்தக் கடன் பொறுப்புக்களுக்கான முதிர்வுக்கான சராசரிக் காலத்தினை 6.8 வருடங்களாக ஆக்கின. வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்கள் 9.6 வருடங்கள் எனும் சராசரி முதிர்வுக் காலத்துடன் நீண்ட முதிர்வுக் காலத் திகதிகளைப் பேணி வந்த அதேவேளை உள்நாட்டுக் கடன் பொறுப்புக்கள் 4.7 வருடங்கள் எனும் சராசரி முதிர்வுக் காலப்பகுதியினைப் பதிவுசெய்திருந்தன. இது இதன் சார்பளவு குறுகிய முதிர்வுக் கட்டமைப்பினைப் பிரதிபலிக்கின்றது.

வெளிநாட்டுக் கடன்களுடன் இணைந்த மீள்நிதியிடல் இடர்நேர்வு தொடர்ந்தும் தாழ்வாகவே காணப்பட்டதுடன் ஒரு வருடத்தினுள் முதிர்வடையும் வெளிநாட்டுக் கடன்களின் 3.4 சதவிகிதமாக மாத்திரமே இது காணப்பட்டது. எவ்வாறாயினும், அண்மித்த தவணை மீள்நிதியிடல் தேவைப்பாடுகளின் பெரும்பகுதியாக உள்நாட்டுக் கடன்கள் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் உள்நாட்டுக் கடன்களின் 24.3 சதவிகிதம் மாத்திரமே ஒரு வருடத்தில் முதிர்வடைபவையாகக் காணப்பட்டன. கடன் மறுசீரமைப்பு மற்றும் நீண்ட கால நிதியிடல் கருவிகளின் அதிகரித்த பாவனை என்பன மீள்நிதியிடல் அழுத்தங்களைக் கணிசமாகக் குறைத்திருந்தாலும், குறுகிய கால உள்நாட்டு முதிர்வுகளின் செறிவு தொடர்ந்தும் ஒரு பிரதான இடர்நேர்வாகக் காணப்பட்டதுடன் இது தொடர்ச்சியான கண்காணிப்பினையும் முனைப்பான கடன் முகாமைத்துவத்தினையும் தேவைப்படுத்தியது.

#### 4.3.5 நாணய விகித இடர்நேர்வு

**வரைபு 4.8 : மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கிற்கான FX படுகடன்**




**வரைபு 4.9 : வெளிநாட்டு படுகடனின் திரவநிலைத்தன்மை இடர்**




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் மற்றும் இலங்கை மத்திய வங்கி*
*குறிப்பு: தற்காலிகமானது*

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் பாதிப்புறுநிலைக் குறிகாட்டிகள் தொடர்ந்தும் 2025 ஆம் ஆண்டில் நிவர்த்திக்கப்பட்டு வந்ததுடன் இது தொடர்ச்சியாக இடம்பெறும் கடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் சாதகமான தாக்கத்தினையும் நாட்டின் வெளிநாட்டுத் துறை நிலை வலுவடைதையும் காட்டுகின்றன. மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கத்திற்கும் அந்நியச் செலாவணிக் கடனுக்கும் இடையிலான விகிதாசாரம் 2022 ஆம் ஆண்டில் 18.96 மடங்குகளாக இருந்து 2025 ஆம் ஆண்டில் 5.51 மடங்குகளாகக் கணிசமாக முன்னேற்றமடைந்துள்ளது. இது வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்கள் தொடர்பில் ஒதுக்கப் போதுநிலையின் கணிசமான அதிகரிப்பினைக் காட்டுகின்றது. முன்னேற்ற விகிதம் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் மந்தமடைந்த போதிலும் வெளிநாட்டுத் துறை நெருக்கடியின் போது அவதானித்த அதிகரித்த மட்டங்களை விட மிகவும் கீழேயே இந்த விகிதாசாரம் தொடர்ந்து காணப்பட்டது. இது பாதுகாப்பு ஒதுக்கங்கள் மீள உருவாக்கப்படுவதையே பிரதிபலிக்கின்றது. எவ்வாறாயினும் வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களின் அபாநேர்வு உட்படுகை இன்னும் உயர்வாகவே காணப்பட்டது.

2024 ஆம் ஆண்டில் 13.1 சதவிகிதமாகக் காணப்பட்ட வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதற்கும் ஏற்றுமதிகளுக்கும் இடையிலான விகிதாசாரம் 2025 ஆம் ஆண்டில் 17.4 சதவிகிதமாக அதிகரித்தது. இது கடன் மறுசீரமைப்பினைத் தொடர்ந்து வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துதல் படிப்படியாகத் தொடங்கியதையே குறிக்கின்றது. இருந்தபோதும், 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட நெருக்கடிக்கு முன்னர் நிலவிய மட்டமான 32.6 இனை விட இது மிகவும் குறைவாகவே காணப்பட்டது. இது நாட்டின் ஏற்றுமதி வருவாய்களுக்குச் சார்பாக வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துதல் கடப்பாடுகள் தொடர்ந்தும் முகாமைத்துவம் செய்யக்கூடியதாக இருப்பதையே காட்டுகின்றது.

இதேபோன்று, வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதற்கும் உத்தியோகபூர்வ ஒதுக்கத்திற்கும் இடையிலான விகிதாசாரம் 2024 ஆம் ஆண்டில் 27.3 சதவிகிதமாக இருந்து 2025 ஆம் ஆண்டு 34.5 சதவிகிதம் எனும் மந்தமான அதிகரிப்பினைக் காட்டியது. இதற்கான காரணம் அதிகரித்த அளவில் கடன்களை மீளச் செலுத்தியமை ஆகும். எவ்வாறாயினும், 2021 – 2022 காலப்பகுதியின் போது அவதானித்த 100 சதவிகிதத்தினை விஞ்சிய மட்டங்களை விட இந்த விகிதாசாரம் தொடர்ந்தும் கணிசமான அளவு குறைவாகவே காணப்பட்டது. இது, வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்தும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான உத்தியோகபூர்வ ஒதுக்கங்களின் வலுப்படுத்தப்பட்ட ஆற்றலையே எடுத்து விளக்குகின்றது.

மொத்தத்தில், கடன் மறுசீரமைப்புக்கு முன்சென்ற காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் வெளிநாட்டுக் கடன் நிலைபேறானதன்மையில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினையும் வெளிநாட்டு நிதியிடல் தாக்கங்களுக்கான மீண்டெழுந்தன்மையினையுமே இந்தக் குறிகாட்டிகள் குறித்துநிற்கின்றன.

2025 ஆம் ஆண்டின் முடிவில் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கத்தினை 8 – 9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகத் தொடர்ந்தும் ஆக்குவதே சர்வதேச நாணய நிதியத்தின் EFF நிகழ்ச்சித்திட்ட இலக்காகும். இது வெளிநாட்டுக் கடனுக்கும் ஒதுக்கங்களுக்கும் இடையிலான விகிதாசாரத்தினை இன்னும் குறைக்கும். ஒதுக்கப் போதுநிலையினை வலுப்படுத்தல் இலங்கையின் பேரண்டப் பொருளாதார வலுப்படுத்தல் நிகழச்சித்திட்டத்தின் அத்திவாரமாகும். இது வெளிநாட்டுத் துறைப் பாதிப்புறுநிலைகளை முகாமைத்துவம் செய்வதற்கும் சந்தையில் நம்பிக்கையினை மீள ஏற்படுத்துவதற்கும் அவசியமானதாகும்.

பிரதான அடைவுகள்

- மொத்தக் கடனின் 88 சதவிகிதம் தொடர்ந்தும் நிலையான வட்டி விகிதங்களில் காணப்பட்டதுடன் வட்டி வீத அபாயநேர்வினையும் இது குறைக்கின்றது
- சராசரிக் கடன் முதிர்வுக் காலம் 6.8 வருடங்களாக அதிகரித்து வெற்றிகரமான கடன் மறுசீரமைப்பினைப் பிரதிபலிக்கின்றது**.**
- மொத்தக் கடனின் பங்காகத் திறைசேரி உண்டியல்கள் 14.06 சதவிகிதமாக இருந்து 10.11 சதவிகிதமாக் குறைவடைந்த். உள்நாட்டுக் கடனின் பங்காகத் திறைசேரி உண்டியல்கள் 22.04 சதவிகித்தில் இருந்து 16.15 சதவிகிமாக் குறைவடைந்து மீள்நிதியிடல் அழுத்தங்களைக் குறைத்தன.
- வெளிநாட்டுக் கடன்களில் 3.4 சதவிகிதமானவை மாத்திரமே ஒரு வருடத்தினுள் முதிர்வடைகின்றன. இது குறுகிய காலத்திற்குப் புதிய கடன்களை எடுக்கும் அபாயநேர்வினைக் குறைக்கின்றது.
- உள்நாட்டுக் கடன் மொத்தக் கடன்களில் 62.5 சதவிகிதமாகத் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் இது நாணய மாற்ற வீத அபாயநேர்வினைக் கட்டுப்படுத்த உதவுகின்றது.
- வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதற்கும் ஏற்றுமதிகளுக்கும் இடையிலான விகிதாசரம் 2021 ஆம் ஆண்டில் 32.6 சதவிகிதமாக இருந்து 2025 ஆம் ஆண்டில் 17.4 சதவிகிதமாகக் குறைவடைந்தது.
- வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதற்கும் உத்தியோகபூர்வ ஒதுக்கத்திற்கும் இடையிலான விகிதாசாரம் 2021 – 2022 இல் 100 சதவிகித்திற்கும் அதிகமாக இருந்து 2025 இல் 34.5 சதவிகிதமாக் குறைவடைந்தது.
- இலகுவாக்கப்பட்ட கடன் திருப்பிச் செலுத்தல் கால அட்டவணை காரணமாகவும் வலுப்படுத்தப்பட்ட ஒதுக்கப் போதுநிலை காரணமாகவும் புறத் திரவத்தன்மை நிலை காரணமாகவும் வெளிநாட்டுக் கடன் பாதிப்புறுநிலைக் குறிகாட்டிகள் தொடர்ந்தும் நெருக்கடி

# அத்தியாயம் - 5
# நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் 2025-2029

2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுப்படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் XI ஆம் அத்தியாயத்திற்கு இணங்க, பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது 2025-2029 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கான இலங்கையின் முதலாவது நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ மூலோபாயத்தை 2025 பெப்ரவரியில் வடிவமைத்தது. இந்த நடுத்தரகால கடன் முகாமைத்துவ மூலோபாயமானது 2025 ஆம் நிதியாண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத் திட்டத்துடன் இணைந்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நடுத்தரகால கடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் அறிமுகமானது, கடந்த காலத்தில் நிலவிய தற்காலிக கடன் வாங்கும் நடைமுறைகளிலிருந்து விடுபட்டு, கடன் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான ஒரு மூலோபாய மற்றும் வெளிப்படைத்தன்மையுடனான கட்டமைப்பை நிறுவியதன் மூலம் பொதுக்கடன் முகாமைத்துவத்தில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறித்தது.

**2025-2029 ஆம் ஆண்டுகளுக்கான நிதி வழங்கல் மூலோபாயம்**

- உள்நாட்டு அடிப்படையிலான நிதி வழங்கல் மூலோபாயம்
- மறுநிதி வழங்கல் மற்றும் கடன் வாங்கல் செலவினைக் கையாள்வதற்காக, நடுத்தரகால மற்றும் நீண்டகால திறைசேரிப் பிணைப்பத்திரங்கள் வெளியீட்டை அதிகரித்தல் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான தங்கியிருத்தலை படிப்படியாகக் குறைத்தல்
- வெளிநாட்டு வர்த்தகக் கடன் வாங்கல்கள் மீதான தங்கியிருத்தலைக் குறைத்தல் மற்றும் வெளிநாட்டுக் கடன் வாங்கல்களை இருதரப்பு மற்றும் பலதரப்புச் சலுகைக் கடன்களுக்கு மாத்திரம் வரையறுத்தல், மாறுபடும் வட்டி வீதங்களிலான கடன் வாங்கல்களைத் தணித்தல்
- மாறுபடும் வட்டி வீதங்களிலான கடன் வாங்கல்களைத் தணித்தல்

2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடன் வாங்கல் செயல்பாடுகள், நடுத்தரகால கடன் முகாமைத்துவ மூலோபாயத்தில் நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளுடன் சீரமைக்கப்பட்டிருந்தன. இம்மூலோபாயத்தின் அமலாக்கமானது, கடன் சொத்துப்பட்டியலின் இடர்நேர்வு விபரவடிவத்தை, குறிப்பாக மறுநிதி வழங்கல் இடர்நேர்வை மேம்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தது. குறுகியகால நிதி வழங்கல் கருவிகள் மீதான தங்கியிருத்தலைக் குறைக்கும் நடுத்தரகால கடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் இலக்கிற்கு இணங்க, மொத்தக் கடனில் திறைசேரி உண்டியல்களின் சதவீதம் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் நிலவிய 14.1 சதவீதத்திலிருந்து 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 10.1 சதவீதமாகக் குறைவடைந்தது. அதேபோன்று, மொத்தக் கடனில் ஒரு வருடத்திற்குள் முதிர்ச்சியடையும் கடனின் சதவீதம் 19.1 சதவீதத்திலிருந்து 15.2 சதவீதமாகக் குறைவடைந்ததுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு வருடத்திற்குள் முதிர்ச்சியடையும் கடனின் சதவீதம் 17.6 சதவீதத்திலிருந்து 15.8 சதவீதமாகக் குறைவடைந்தது.

மொத்தக் கடன் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக்கான சராசரி காலம், 6.7 வருடங்களிலிருந்து 6.8 வருடங்களாக அதிகரித்ததுடன், இது கடன் முதிர்வுக்காலங்களின் படிப்படியான நீடிப்பைக் காட்டுகின்றது. இந்த மேம்பாடுகள், மறுநிதி வழங்கல் இடர்நேர்வுகளைக் குறைப்பதிலும் பொதுக்கடன் சொத்துப்பட்டியலின் மீளெழுச்சித் திறனை வலுப்படுத்துவதிலும் நடுத்தரகால கடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் வினைத்திறனை வெளிப்படுத்துகின்றன.

இவ்வருடத்தில் கடனுக்கான செலவும் மேம்பட்டதுடன், வட்டிச் செலுத்தல்கள் 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.9 சதவீதமாகக் காணப்பட்டதிலிருந்து 2025 ஆம் ஆண்டில் 7.6 சதவீதமாகக் குறைவடைந்தன. நாணய மாற்று வீதத் தேய்மானத்தின் தாக்கம் காரணமாக, மொத்தக் கடனில் வெளிநாட்டு நாணயக் கடன் சிறிதளவு அதிகரித்து 38.5 சதவீதமாகக் காணப்பட்டது.

குறிப்பிட்ட வட்டி வீத இடர்நேர்வுச் சுட்டிகள், கடன் மறுசீரமைப்பு மற்றும் சந்தை முன்னேற்றங்களைத் தொடர்ந்து கடன்

கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களைப் பிரதிபலித்த போதிலும், ஒட்டுமொத்தக் கடன் சொத்துப்பட்டியலானது நடுத்தரகால கடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் மூலோபாய நோக்கங்களுடன் பரந்தளவில் சீரமைக்கப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட முன்னேற்றமானது, அரசாங்கத்தின் கடன் முகாமைத்துவ மூலோபாயத்தின் வெற்றிகரமான அமலாக்கத்தை எடுத்துக்காட்டுவதுடன், கடன் நிலைத்தன்மையை மறுசீரமைத்தல் மற்றும் பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணுதல் ஆகிய பரந்த நோக்கத்திற்கும் ஆதரவளிக்கின்றது.

**அட்டவணை 5.1: 2025-2029 மற்றும் 2026-2030 ஆம் ஆண்டுகளுக்கான நடுத்தரகால கடன் முகாமைத்துவ மூலோபாயத்திற்கு அமைவாக செலவு மற்றும் இடர்நேர்வுச் சுட்டிகளின் ஒப்பீடு**

| செலவு மற்றும் இடர்நேர்வு குறிகாட்டிகள் | | 2024 இறுதி | 2025 இறுதி | கண்ணோட்டம் |
|---|---|---|---|---|
| **படுகடன் செலவு** | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) சதவீதமாக வட்டிச் செலுத்தல் | 8.9 | 7.6 | **சாதகம்** |
| **மீள்நிதியளிப்பு இடர்நேர்வு** | முதிர்ச்சிக்கான சராசரி காலம் (வருடங்கள்) | 6.7 | 6.8 | **சாதகம்** |
| | 1 வருடத்திற்குள் முதிர்ச்சியடையும் கடன் (மொத்தக் கடனில் சதவீதம்) | 19.1 | 15.2 | **சாதகம்** |
| | 1 வருடத்திற்குள் முதிர்ச்சியடையும் கடன் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம்) | 17.6 | 15.8 | **சாதகம்** |
| **வட்டி விகித இடர்நேர்வு **** | மறுநிர்ணயித்தலுக்கான சராசரி காலம் (வருடங்கள்) | 6.5 | 6.0 | |
| | 1 வருடத்திற்குள் வட்டி வீதம் மறுநிர்ணயிக்கப்படும் கடன் (மொத்தக் கடனில் சதவீதம்) | 21.4 | 25.9 | |
| | திறைசேரி உண்டியல்கள் உட்பட நிலையான வட்டி வீதக் கடன் (மொத்தக் கடனில் சதவீதம்) | 97.3 | 88.3 | |
| | திறைசேரி உண்டியல்கள் (மொத்தக் கடனில் சதவீதம்) | 14.1 | 10.1 | **சாதகம்** |
| **அந்நியச் செலாவணி இடர்நேர்வு** | அந்நியச் செலாவணிக் கடன் (மொத்தக் கடனில் சதவீதம்) | 37.5 | 38.5 | சிறிதளவு அதிகரிப்பு |

*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம், MTDS பகுப்பாய்வுச் சாதனம்*

**குறிப்புகள்**:

- சராசரி நிறையேற்றப்பட்ட வட்டி வீதங்கள், மறுநிதி வழங்கல் மற்றும் வட்டி வீத இடர்நேர்வுச் சுட்டிகள் உள்ளடங்கலாக, திட்டமிடப்பட்ட காசுப் பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்ட செலவு மற்றும் இடர்நேர்வுச் சுட்டிகள், திட்டமிடப்பட்ட நாணய மாற்று வீத எடுகோள்களைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டுள்ளன.
- வெளிநாட்டுக் கடனானது, உள்நாட்டில் ஒப்பந்தம் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணய மதிப்பிலான கடன்களையும் உள்ளடக்குகிறது.
- உள்நாட்டுக் கடனானது, உள்நாட்டில் ஒப்பந்தம் செய்யப்பட்ட இலங்கை ரூபா மதிப்பிலான கடன்களை உள்ளடக்குகிறது.
- ** 2024 ஆம் ஆண்டின் இறுதிக்கும் 2025 ஆம் ஆண்டின் இறுதிக்கும் இடையிலான குறிப்பிட்ட வட்டி வீத இடர்நேர்வுச் சுட்டிகளின் ஒப்பீடுகள் எச்சரிக்கையுடன் விளக்கப்பட வேண்டும்; ஏனெனில், 2024 ஆம் ஆண்டின் இறுதிக்கான MTDS 2025–2029 அடிப்படைமுறைக் கணக்கீடுகளில் மாறுபடும் வீத உள்நாட்டு திறைசேரி முறிகள் உள்ளடக்கப்படவில்லை..

# அத்தியாயம் - 6

# படுகடன் முகாமைத்துவ செயற்பாடுகளில் முன்னேற்றங்கள்

## 6.1 உள்நாட்டு படுகடன் முயற்சிகள்

இலங்கை மத்திய வங்கியிடமிருந்து அரசாங்கப் பிணையங்கள் வெளியிடும் பணிகளை பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு (பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்) 2025 டிசம்பர் மாதம் முதல் வெற்றிகரமாக மாற்றியதன் மூலம், பொதுப் படுகடன் முகாமைத்துவத்தில் குறிப்பிடத்தக்கதொரு மைல்கல் எட்டப்பட்டது. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட விரிவான ஆயத்தப் பணிகள் மற்றும் களப் பயிற்சிக்குப் பிறகு, சந்தை நடவடிக்கைகளுக்கு எவ்வித இடையூறுமின்றி இந்த மாற்றம் சுமுகமாக நிறைவடைந்தது.

வருடாந்த கடன் பெறுகைத் திட்டம் மற்றும் அரசாங்கத்தின் நிதிசார் மூலோபாயத்துக்கு இணங்க, திறைசேரி உண்டியல்கள், திறைசேரிப் முறிகள் மற்றும் பிற அங்கீகரிக்கப்பட்ட படுகடன் சாதனங்களை வெளியிடுவதன் மூலம், அரசாங்கத்தின் நிதித் தேவைகளுக்கு உள்நாட்டுக் கடன் பெறுகை நடவடிக்கைகள் தொடர்ந்து ஆதரவளித்தன. ஆண்டு முழுவதும், அரசாங்கப் பிணையச் சந்தையின் திறமையான செயற்பாட்டை உறுதி செய்வதற்கும், முதலீட்டாளர் நம்பிக்கையைத் தக்கவைப்பதற்கும், சந்தைப் பங்கேற்பாளர்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பு பேணப்பட்டது.

உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவ நடைமுறைகளை வலுப்படுத்தவும், சந்தை வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தவும், பங்குதாரர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கவும் பல முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. சந்தை நிலவரங்கள், முதலீட்டாளர் தேவை மற்றும் மீள்நிதியளிப்புத் தேவைகள் குறித்த தொடரான மதிப்பீடுகள், தகவலறிந்த படுகடன் வாங்கும் முடிவுகளுக்கும் திறமையான படுகடன் வழங்கலுக்கும் ஆதரவளித்தன.

2025 ஆம் ஆண்டில், உள்நாட்டு நிதி திரட்டல் முதன்மையாக திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் உள்நாட்டு டொலர் முறிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆண்டில், திறைசேரி உண்டியல்களில் மொத்த வெளியீடு ரூ. 5,347.37 பில்லியனாகவும், திறைசேரி முறிகளில் ரூ. 2,397.69 பில்லியனாகவும், உள்நாட்டு டொலர் முறிகளில் ஐ.அ.டொ. 50 மில்லியனாகவும் இருந்தது. இது, தனது நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் தொடர்ந்து உள்நாட்டுச் சந்தையையே சார்ந்திருப்பதைப் பிரதிபலிக்கிறது.

**அட்டவணை: 6.1 உள்நாட்டு கடன்பெறுகை வெளியீடுகளின் செயலாற்றுகை – 2025***

| சாதனம் | மொத்தமாக வழங்கப்பட்டது | ஏலத்தில் பெறப்பட்ட மொத்த விலைமனு | ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தம் |
|---|---|---|---|
| **தி - உண்டியல்கள் (ரூ. பில்லியன்)** | | | |
| 91 நாட்கள் | 1,166 | 2,521 | 851 |
| 182 நாட்கள் | 2,234 | 5,495 | 2,444 |
| 364 நாட்கள் | 2,199 | 4,526 | 2,052 |
| **மொத்தம்** | **5,599** | **12,543** | **5,347** |
| **தி - முறிகள் (ரூ. பில்லியன்)** | | | |
| 3 ஆண்டுகள் | 40 | 148 | 44 |
| 4 ஆண்டுகள் | 552 | 1470 | 568 |
| 5 ஆண்டுகள் | 570 | 1209 | 502 |
| 6 ஆண்டுகள் | 245 | 550 | 220 |
| 8 ஆண்டுகள் | 565 | 1,204 | 498 |
| 10 ஆண்டுகள் | 480 | 1,106 | 477 |
| 12 ஆண்டுகள் | 93 | 197 | 88 |
| **மொத்தம்** | **2,545** | **5,884** | **2,397** |
| **உள்நாட்டு டொலர் முறிகள் (ஐ.அ.டொ. மில்.)** | | | |
| 1 வருடம் | 50** | 45.5 | 33 |
| 2 ஆண்டுகள் | | 42.5 | 17 |
| 3 ஆண்டுகள் | | 1.0 | – |
| **மொத்தம்** | **50** | **89** | **50** |

*மூலம் : பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*
** 2025 ஆம் ஆண்டிற்குள் தீர்வுத் திகதிகள் வரும் வெளியீடுகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.*
*** சாதகமான சந்தை வரவேற்பைப் பொறுத்து, கூடுதலாக மூன்று மடங்கு விரிவாக்கம் செய்யப்பட வாய்ப்புள்ளது.*

### 6.1.1 திறைசேரி உண்டியல்கள் முதன்மைச் சந்தை

அரசாங்கத்தின் குறுகிய கால பணப்புழக்கத் தேவைகளை நிர்வகிப்பதற்காக பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினால் பயன்படுத்தப்பட்ட முக்கிய படுகடன் பிணையங்களில் ஒன்றாக திறைசேரி உண்டியல்கள் தொடர்ந்து இருந்து வந்தன. 2025 ஆம் ஆண்டில், திறைசேரி உண்டியல்கள் 91 நாட்கள், 182 நாட்கள் மற்றும் 364 நாட்கள் என மூன்று நிலையான முதிர்வுக் காலங்களில் வெளியிடப்பட்டன.

2025 இல் மொத்தம் 53 வாராந்த திறைசேரிப் உண்டியல் ஏலங்கள் நடத்தப்பட்டன. 2025 ஆம் ஆண்டில், திறைசேரி உண்டியல் வெளியீடுகள் மூலமான மொத்த நிதித் திரட்டல் (முகமதிப்பின் அடிப்படையில்) இலங்கை ரூ. 5,347.4 பில்லியனாக இருந்தது. இது 2024 ஆம் ஆண்டில் இலங்கை ரூ. 7,900.6 பில்லியனாக இருந்ததோடு ஒப்பிடுகையில் குறைவு. மேலும், 2025 ஆம் ஆண்டில் இலங்கை ரூ. 6280.2 பில்லியன் மதிப்பிலான திறைசேரிப் உண்டியல்களை மீள்நிதியளிப்பதன் மூலம் இந்த நிதித் திரட்டல் நிகழ்ந்துள்ளது. மொத்த நிதித் திரட்டலில் ஏற்பட்ட இந்த சரிவுக்கு, வலுவான வருமானமீட்டல், திறைசேரிப் உண்டியல்கள் மீதான சார்பைக் குறைத்து நீண்ட கால திறைசேரி முறிகளில் அதிக கவனம் செலுத்தும் மூலோபாய அணுகுமுறை ஆகியவை முக்கியக் காரணங்களாக அமைந்தன.

2025 இன் இறுதியில் அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், திறைசேரிப் உண்டியல்களுக்கான முதன்மைச் சந்தை சராசரி வருவாய் விகிதங்கள் (PMWAYRs) 2025 ஆம் ஆண்டு முழுவதும் பொதுவாக ஒரு நிலையான போக்கைக் காட்டின. 2024 ஆம் ஆண்டின் இறுதி நிலைகளுடன் ஒப்பிடுகையில், 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் வருவாய்கள் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் முறையே 107, 82 மற்றும் 77 அடிப்படைப் புள்ளிகள் குறைந்தன. அதன்படி, 2025 இன் இறுதியில், 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் முதிர்வுகளுக்கான WAYR கள் முறையே 7.55 சதவீதம், 7.95 சதவீதம் மற்றும் 8.19 சதவீதமாக இருந்தன.

**அட்டவணை 6.2 திறைசேரி உண்டியல் ஏலங்களின் முதன்மைச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்* %**

| காலம் | 2024 நிறைவுற்ற காலாண்டு 4 | 2025 நிறைவுற்ற காலாண்டு 1 | 2025 நிறைவுற்ற காலாண்டு 2 | 2025 நிறைவுற்ற காலாண்டு 3 | 2025 நிறைவுற்ற காலாண்டு 4 |
|---|---|---|---|---|---|
| 91 நாள் | 8.62 | 7.50 | 7.55 | 7.57 | 7.55 |
| 182 நாள் | 8.77 | 7.84 | 7.75 | 7.89 | 7.95 |
| 364 நாள் | 8.96 | 8.25 | 7.94 | 8.02 | 8.19 |

*மூலம் : பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

** நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தின் ஒவ்வொரு காலாண்டு திறைசேரிப் உண்டியல் ஏலத்தை முடிவுக்குக் கொண்டுவருதல்*

**வரைபு 6.1 திறைசேரி உண்டியல் ஏலங்களின் முதன்மைச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்**




*மூலம் : பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

### 6.1.2 திறைசேரி முறிகள் முதன்மைச் சந்தை

**வரைபு 6.2: 2025 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட தொகை மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை.**




*மூலம் : பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

அரசாங்கத்தின் நீண்டகால பணப்புழக்கத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் பயன்படுத்திய முக்கிய படுகடன் சாதனங்களில் ஒன்றாக திறைசேரி முறிகள் தொடர்ந்து இருந்து வந்தன.

அதன்படி, அரசாங்கத்தின் நடுத்தர மற்றும் நீண்ட கால நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், சுமார் 3 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரையிலான பல்வேறு முதிர்வுக் காலங்களை வழங்கி, திறைசேரி முறிகள் சீரான அடிப்படையில் வெளியிடப்பட்டன.

2025 இல் திறைசேரி முறி ஏலங்களில் வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 2,544.0 பில்லியனாக இருந்தது. அதே சமயம், ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை ரூ. 2,397.7 பில்லியனாக இருந்தது. இதன் விளைவாக, நேரடி வெளியீட்டுச் சாளரம் உட்பட அனைத்துக் கட்டங்களிலிருந்தும் ஒட்டுமொத்த ஏற்பு நிலை 94.3 சதவீதமாக இருந்தது. ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டில், வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 2,550.5 பில்லியனாக இருந்தது. அதில், நேரடி வெளியீட்டுச் சாளரம் உட்பட அனைத்துக் கட்டங்களிலிருந்தும் ரூ. 2,571.0 பில்லியன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, ஏற்பு விகிதம் 100.8 சதவீதமாக இருந்தது.

ஆண்டின் முற்பகுதியில் ஏலச் செயற்பாடு ஒப்பீட்டளவில் வலுவாக இருந்தது; பெரும்பாலான ஏலங்கள் 110 சதவிகிதம் அதிகப்படியான ஏற்பு அளவைப் பதிவுசெய்தன, இது வலுவான முதலீட்டாளர் தேவையைக் குறிக்கிறது. இருப்பினும், ஆண்டின் நடுப்பகுதியில், குறிப்பாக 2025 ஜூலை மற்றும் செப்டம்பருக்கு இடையில், உலகளாவிய வர்த்தக நிலைமைகள் மற்றும் வர்த்தகக் கொள்கை மேம்பாடுகளில் நிலவிய நிச்சயமற்ற தன்மையால் ஏற்பு நிலை கணிசமாகக் குறைந்தது. இது, அரசாங்கத்தின் கையிருப்பில் உள்ள காசு இருப்பைப் பயன்படுத்துவதன் மூலம் நிர்வகிக்கப்பட்டது. திறைசேரி முறித் தீர்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட மொத்தத் தொகையானது காசு இருப்பிலிருந்து பெறப்பட்டது என்பதைக் குறிக்கிறது. அதைத் தொடர்ந்து, ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பு நிலைகள் மீட்சியின் அறிகுறிகளைக் காட்டின.

**அட்டவணை 6.3: 2025 ஆம் ஆண்டில் ஏற்படும் விளைச்சல் மாற்றங்கள்**

| காலம் (ஆண்டுகள்) | 2025 | | | 2024 இல் மாறுபாடு சதவீதம் |
|---|---|---|---|---|
| | மிகக் குறைந்த விளைவு | அதிகபட்ச விளைவு | மாறுபாடு % | |
| 4 | 9.41 | 10.63 | 11.48% | 36.31% |
| 5 | 9.47 | 10.73 | 11.74% | 30.02% |
| 6 | 10.00 | 11.23 | 10.95% | 26.10% |
| 8 | 10.29 | 11.47 | 10.29% | 15.45% |
| 10 | 10.46 | 11.50 | 9.04% | 12.48% |
| 12 | 10.83 | 11.08 | 2.26% | பொருந்தாது |

*மூலம் : பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

2025 இல் முதன்மைச் சந்தை வருவாய்களைப் பொறுத்தவரை, நடுத்தர கால முதிர்வுகளில் வருவாய் ஏற்ற இறக்கம் குறிப்பிடத்தக்களவில் அதிகமாக இருந்தது. அதே சமயம், நீண்ட கால முதிர்வுகள் கொண்ட திறைசேரிப் பிணையங்களிடையே குறைந்த மாறுபாட்டைக் காட்டின. இது ஒப்பீட்டளவில் நிலையான நீண்ட கால சந்தை எதிர்பார்ப்புகளைச் சுட்டிக்காட்டுகிறது. இருப்பினும், 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 இல் அனைத்து முதிர்வுக் காலங்களிலும் ஒட்டுமொத்த வருவாய் ஏற்ற இறக்கம் குறைந்தது. இது அரசாங்க பிணையச் சந்தையில் மேம்பட்ட நிலைத்தன்மையைப் பிரதிபலிக்கிறது.

**வரைபு 6.3: 2024/2025 ஆம் ஆண்டிற்கான முதன்மைச் சந்தையின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தின் (WAYR) நகர்வு**




** 2024-ஆம் ஆண்டில் 12-ஆண்டு மற்றும் 15-ஆண்டு டெனார் ஒப்பந்தங்களுக்கும், 2025-ஆம் ஆண்டில் 15-ஆண்டு டெனார் ஒப்பந்தத்திற்கும் WAYR சேவை கிடைக்கவில்லை.*

*மூலம் : பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

